உ

சிவமயம்

# உயர்திரு. R. R. பூபாலசிங்கம் J. P.



# நினைவு மலர்

# சமர்ப்பணம்

முன்னைய தவத்தின் பேருய்
முகிழத்ததோர் அன்பு வித்தே!
அன்னையின் நயினை பெற்ற
ஆழ்கடல் ஈன்ற முத்தே!
பின்னையெம் வாழ்வுப் பூங்கா
பூழிற்றிய பூவின் கொத்தே!
தன்னையே தந்து தொண்டில்
தனித்துவம் பெற்ற சத்தே!
உன்னையே எண்ணும் தோழர்(க்)
உவந்திடும் உணர்வின் பித்தே!
என்னையுன் ஆற்றல்! என்று
எவருமே ஏற்றும் சித்தே!
மண்ணிலே புகழிற் தோன்றி
மாண்புற வாழ்ந்த பற்றே!
எண்ணினர் எண்ண மெல்லாம்
இதழ்கமழ் மலராய் ஆக்கி
கண்ணிலே ஒற்றிப் போற்றிக்
கழல்களில் வைத்தோம் ஐயா
பண்ணிய பூசை உந்தன்
பாதபூ சைக்கே - யாக.

பூபாலசிங்கம் குடும்பத்தினர்

பெற்றதாயன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலாலன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய வனைத்தும்
முதவலாலன்னை யெக்கலையும்
சொற்றதாலன்னை யுலகொடுவானுந்
தொழுதலாலன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூடணியால்.

— வரகவி நயினை க. நாகமணிப்புலவர்



"நாகப்படைசூழும் நாகம்மாள் — தினம்
நாகம் பூச்சூடிவரும் நல்லம்மாள்"

| | | |
|---|---|---|
| ஏழ்மையிலும் | — | நேர்மை |
| கோபத்திலும் | — | பொறுமை |
| தோல்வியிலும் | — | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | — | பரோபகாரம் |
| துன்பத்திலும் | — | தைரியம் |
| செல்வத்திலும் | — | எளிமை |
| பதவியிலும் | — | பணிவு |
| நல்லதையே நினை | --- | நல்லதையே செய் |



மலர்வு:
3-6-1922

உதிர்வு:
21-7-1982

# தோற்றமும் வாழ்க்கை ஏற்றமும்

முன்னைப் பழமையும் பின்னைப் புதுமையும் பெற்று விளங்குவது நயினுதீவு. அன்னை நாகபூஷணியின் அருளார் அமுதம், ஆர்த்த பிறவித் துயர்கெட அடியார் ஆடும் தீர்த்தமாகத் திருவருள் கூட்டுவதை எவரும் அறிவர். அன்னையின் திருவருள் நீழலிலே தினமும் திளைக்கும் நயினை மக்கள், தூய அன்னையின் துணையினுல் கலையாத கல்வியும் கன்ருத வளமையும் பெற்று வாழ்கின்றனர். இந்தப் புனிதபூமி புறந்தந்த பெருந்தகையாளருள் ஒருவர் தான் திரு. R. R. பூபாலசிங்கம் அவர்கள். நயினுதீவுச் சாமியார் திருப்பெருகு முத்துக்குமாரசாமி அவர்கள், ஈழத்து இல்லற ஞானி உயர்திரு. க. இராமச்சந்திரா அவர்கள், சிவாகம ஞானபானு சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், பாரதி அடியான் ப. கு. சரவணபவன், பெரியவாத்தியார் என்று அழைக்கப்பெறும் திரு. ச. நா. கந்தையா அவர்கள், ஆகியோரின் ஆசிகளினுலும், அன்புகெழுமிய நட்பினுலும் வளர்க்கப்பெற்றவர்தான் திரு. R. R. பூபாலசிங்கம் அவர்கள்.

இளமையிலேயே துடிப்பும் மிடுக்குமுள்ள இளைஞுகை இருந்த இவர், சிறுபிராயத்திலே தமது தந்தையாரை இழந்தார் இது அவருக்கு ஒரு பேரிழப்பாக இருந்தது. தந்தையை இழந்த இவருக்கு பாரிய குடும்பப் பொறுப்புகள் இருந்தன. புரட்சி எண்ணங்கள் ஒருபுறம், வறட்சியான ஏழ்மை வாழ்க்கை மறுபுறம். இவருடைய மனமாகிய கொடி பூமியிலே விழுந்து சின்னுபின்னமாக ஒடிந்து களிதரவகையற்றுக் கிடந்தது. இனியேதும் தமக்கு வாழ்வு வருமோ எனக்கருதி ஏங்கினுர். ''அரும்பு மலராகிய பின்னர்தான் வண்டுகள் தேன் உண்ணுவதற்கு ரீங்காரம் செய்து வருகின்றன. அவ்வாறே எண்ணங்களும் செயலாகும் போது தான் புகழ் ஒருவனைத் தேடி வருகின்றது'' என்ருர் ஓர் அறிஞர். எண்ணி, எண்ணியாங் கெய்தும் மனத்திண்மை பூபாலசிங்கம் அவர்களை ஒரு கரும வீரனுகப் பிற்காலத்திலே ஆக்கியதில் வியப்பில்லை.

இளமையில் கற்கமுடியாத மனவேதனையுடன், குடும்பபாரத்தைத் தாங்குவதில்; பல உடல் உளவேதனைகளையும் தாங்க வேண்டியவராய் 1931-ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து, உற்ருேரும், மற்ருேரும் சிறு உதவிகள் செய்ய திரு. T தம்பித்துரை அவர்களுக்கு பத்திரிகை

---

''வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே'' — பாரதி

விற்பனையாளனுகப் பணியாற்றினுர். தினசரி 21 சதம் உழைத்து வந்தார். அக்காலத்தில் அறிவறிந்த பெரியோர்கள் வீட்டிற்குப் பத்திரிகை கொண்டு செல்வதால், அக்கால அரச அதிபர் டைசன், கலாநிலையம் உருத்திர கோடீஸ்வரக் குருக்கள், யோகர் சுவாமிகள், திருப்புகழ்ச் சாமி, வடிவேலுச்சாமி, அளுக்கடைச் சுவாமியார், ஆகியோரின் நயன தீட்சைகளும், இவருக்குக் கிடைத்தன. ''கூடு மெய்த்தொண்டர் குழாத்துடன் கூடியிருந்த இந்த அனுபவத்தின் மகத்துவத்தை இறக்கும் வரை நெஞ்சில் நிறுத்தி மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியுமடைந்து வந்தார்.

பத்திரிகை விற்பனைப் பணியாளராக இருந்தமையால் உலக அறிவை அவர் வளர்த்துக்கொண்டார். 1917-ல் நடந்த சோவியத் ஒக்டோபர் புரட்சி, பற்றி அவர் பெற்ற அறிவு, இந்திய விடுதலை இயக்க எழுச்சி, பஞ்சாப்படுகொலை, உப்புச்சத்தியாக்கிரகம், சமுக ஒடுக்குமுறைகளுக்கெதிரான சுயமரியாதை இயக்கக் கருத்துக்கள் ஆகியன இவரை வெகுவாகக் கவர்ந்தன.

1938-ம் ஆண்டு இவர் இலங்கை சமசமாசக் கட்சியில் சேர்ந்தார். அதனுல் தோழர் டாக்டர் விக்கிரமசிங்கா, கொல்வின் R. D. சில்வா திரு. N. M. பெரேரா ஆகியோரின் நட்பு இவருக்கு கிடைத்தது. இதன் பின் கண்டிப் பேரின்பநாயகம் தலைமையிலான இலங்கை வாலிபர் சங்கத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இரண்டாம் உலக யுத்த காலத்தில் காலனித்துவம், நாசிசம், பாசிசம், பிரபுத்துவம், முதலாளித்துவம், என்பவற்றை எதிர்க்கும் சக்திகளோடு சேர்ந்தார். 4 வது சர்வ தேசியம் என்னும் நொஸ்கீத வாதம் தலையெடுத்த போது கொம்யூனிஸ்டுகள் சமசமாசக் கட்சியிலிருந்து வெளியேறினர். 1943 யூலை 3-ம் திகதி 91 ம் இலக்கம் கொட்டா ரோட், கொழும்பு என்ற இடத்தில் பொதுவுடமைக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட சமயம் இவரும் கூட்டத்தில் பங்கு கொண்டார். அன்றிலிருந்து பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளியாகத் தொண்டாற்றத் தொடங்கினுர். திரு துரைசிங்கம், திரு. S. N. கந்தசாமி, இராமனுதன் நாயர், சங்கர் பிரேம்லால், குமாரஸ்ரீ, அரி அபயகுணவர்த்தன, M. D. மென்டிஸ் ஆகியோர் இவருக்கு வழிகாட்டிகளாயினர். அதனைத்தொடர்ந்து பீற்றர் கெனமன், கார்த்திகேசு மாஸ்டர், A. வைத்திலிங்கம், I. R. அரியரெத்தினம், கந்தையா ஆகியோரின் நட்புறவு வளர்ந்தது. திரு. பூபாலசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்த காலத்தில் தோழர் அட்வகேட் சிற்றம்பலம், தர்மகுலசிங்கம், நடேசன், சிவசிதம்பரம், துரைராசசிங்கம், M. C. சுப்பிரமணியம், ஆகியோரின் நட்பும், தொழிலாளர் சங்கங்களில் ஈடுபாடும்,

---

''தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்.'' — பாரதி

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக் கழகப் பங்களிப்பும் இருந்தது. குறெசற் தம்பையா, நேசையா மாஸ்டர் ஆகியோரின் இல்லங்களில் நடைபெறும் வேதாந்த வகுப்புகளுக்கும் சென்று வந்தார்.

இக்காலத்தில் மூட நம்பிக்கைகள், சமூகக் குறைபாடுகள் ஆலயங்களில் பலியிடுதல் போன்றவற்றைத் தீவிரமாக எதிர்த்துப் போராடினார். முதன் முதலில் அவருடைய போராட்டம் பிறந்த ஊராகிய நயினாதீவிலே தொடங்கியது. நயினாதீவு தெற்குத் தில்லைவெளியிலுள்ள பிடாரி கோவிலிலே வருடமொருமுறை வேள்விநடாத்தப் பெறுவது வழக்கம். இந்த வேள்வியின் போது ஆட்டுக் கடாக்கள், கோழிகள் போன்றவற்றைப் பலியிடுவது வழக்கமாக இருந்து வந்தது. 1947'ம் ஆண்டளவில் நயினாதீவில் ஆலயப் பிரவேசத்தைத் துரிதப்படுத்துவதற்காகவும், பலியிடுதலை நிறுத்துவதற்காகவும் பூபால் அவர்கள் போராட்டங்களை நடாத்தினார். அப்போதைய கிராம விதானையார் திரு. கா. க. சிவசிதம்பரம் அவர்கள் திரு. க. சோமசுந்தரம் ஆசிரியர். திரு ஆ. சி. நடராசா அவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பிடாரி கோவிலில் நடத்தப்பெற்றுவந்த பலியிடுதல் வழக்கத்தை முற்றாக ஒழிப்பதில் திரு.பூபால் அவர்கள் அவ்வாண்டில் வெற்றி கண்டார்கள். அடுத்த ஆண்டில் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் கரிஜன ஆலயப் பிரவேசமும் வெற்றிகரமாக நடந்தேறியது.

நயினை நாகபூஷணி அம்மன் திருவிழாக் காலங்களில் வரும் அடியார்களுக்கு குடிநீர் வசதி, உணவு வசதி, போக்குவரத்து வசதி ஆகியவற்றை வழங்குவதிலும், தீவுப்பகுதி அபிவிருத்தியிலும், ஏனைய ஸ்தாபனங்களோடு, தனித்தும் ஒருமித்தும் நின்று தீவிரமாக ஆக்கபூர்வமான பணிகளைச் செய்தார்.

ஆரம்பத்தில் ''மணிபல்லவதேவி பொதுநிலைக் கழகம்'' என்ற ஒரு கழகத்தை நயினாதீவில் ஆரம்பித்தவர்களுள் இவரும் ஒருவராவர். இக்கழகம் நயினாதீவுச் சாமியாரினதும் திரு. க. இராமச்சந்திரா அவர்களினதும் ஆசியையும் பெற்று தன்னாலான பணிகளை அடியார்களுக்குச் செய்தது. சப்பரத் திருவிழா, தேர்த் திருவிழா, ஆகிய தினங்களில் கவளங் கவளமாக அடியார்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள். திருவாளர்கள், நா. பொன்னுத்துரை, வே. சுந்தரம்பிள்ளை, நா. கணபதிப்பிள்ளை, க. கனகசபாபதி, S. R. சின்னத்துரை, வே. சங்கரப்பிள்ளை த நாகேசு, அ. சி. நல்லையா, அ. சுந்தையா, கு பாலசுப்பிரமணியம், வே க கு நல்லையாபிள்ளை, க. வே. பாமலிங்கம். ப சரவணபவன்

---

'ஓயுதல் செய்யோம்தலை சாயுதல் செய்யோம்''
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம். — பாரதி

வே. கந்தையா, ச. நா. கந்தையா, திரு. நா. விசுவலிங்கம் ஆகியோர் இக் கழகத்தை வளர்த்தனர் எனலாம். இதுவே பிற்காலத்தில் அமுத சுரபி அன்னதான சபைக்கு அத்திவாரமாகியது என்பதை மறுக்கமுடியாது. இக்கழகம் நயினை நாகமணிப் புலவருக்கு முதன் முதலில் விழா வெடுத்ததோடு பேசும் படக்காட்சியையும் கிராம மக்களுக்கு அறிமு படுத்தியது. இது நடந்தது 1948-ம் ஆண்டு. அவ்வாண்டில் மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்காக ஒரு அஞ்சலிக் கூட்டம் நயினாதீவில் பிரம்மஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. பிறந்த மண்ணில் முதன்முதலாக பூபாலசிங்கம் அவர்கள் தமது கன்னிப்பேச்சை இம் மேடையில் நிகழ்த்தினார். அதன் பின்னர் நயினாதீவு தெற்கில் ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம் நிறுவுவதில் ஆர்வங் கொண்டு அதற்காகப் பாடுபட்டு, பல பெரும் விழாக்களையும் கொண்டாடி, தமிழ் நாட்டிலிருந்தும் ஈழத்திலிருந்தும் பேச்சாளர்களை தருவித்து எழுச்சியை உண்டாக்கினார்.

யாழ்ப்பாணத்தில் புதினப் பத்திரிகை விநியோகித்த காலத்தில் மறக்கமுடியாத சம்பவம் ஒன்று நடந்தது. புரட்சிக் கருத்துக்களைப் பரப்பும் செய்தித் தாள்களுக்குத் தடை விதித்திருந்த காலம் அது. ஒளித்தும் மறைத்தும் அவற்றை விற்பதில் இவர் வல்லவராக இருந்தார். ஒரு நாள் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் அப்பத்திரிகைகளை விற்றபோது பொலிஸ் அதிகாரியின் சவுக்கடிக்கு இலக்காகினார். இறக்கும்வரை அந்த அடியின் தழும்புகள் அவருடைய முதுகில் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் உள்ள தமிழர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மாநில சுயாட்சி ஒன்றே ஏற்றது என்பதில் ஆணித்தரமாக இருந்து வந்தார். சைவ ஆலயங்களில் பூசை செய்வதற்கு ஒழுக்கமும் சீலமுமுடைய எவரும் தகமை பெறலாம் என்றும், அதற்கென ஒரு குலமும் கோத்திரமும் இருக்கவேண்டியதில்லை என்பது இவருடைய கருத்து. சைவ அறநிலையங்களுக்கென ஒரு பாதுகாப்புச் சபை இலங்கையிலே உருவாக்கப்படவேண்டுமெனப் பாடுபட்டார். நாவலருக்கு மணிமண்டபம் எழுப்பப்படவேண்டுமென்ற செயற்பாடு ஆரம்பித்த காலத்தில் பலர் எதிர்ப் பிரசாரத்தில் ஈடுபட்டபோது-நாவலருக்கு மணிமண்டபம் கட்டாயம் என்பதில் உற்சாகமாக நின்று வாதிட்டவர் திரு பூபாலசிங்கம் அவர்கள். இராமேஸ்வரா ஆலயத்திற்கு இலங்கையில் உள்ள சொத்துக்களுக்கு அறங்காவலராகவும் இவர் நியமிக்கப்பெற்றார்.

---

''சாதி இரண்டொழிய வேறில்லை' யென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போம்'' —பாரதி

காணியற்ற மக்களின் பிரச்சனே, மாணவ சமுதாய வளர்ச்சி, குடி நீர் வசதி ஆகியவற்றை தீர்ப்பதில் - யாழ்ப்பாணப் பகுதியிலும் இவர் பாடுபட்டு வந்தார். இவருடைய சமூக சேவை மனப்பான்மையை அறிந்த அரசு இவருக்கு J. P. பட்டம் வழங்கிக் கௌரவித்தது. பொதுவுடமைச் சித்தாந்தங்களே மக்கள் நலவுடமைக்காகப் பயன்படுத்துவதில் தமது செயல் வீரத்தை எல்லா மட்டத்திலும் பசுமரத் தாணிபோல் பதியவைத்தார். உலகில் தாழ்த்தப்பட்ட மக்கள் நசுக்கப்பட்டபோதெல்லாம் அதற்குக் குரல் கொடுக்க இவர் தயங்கியதில்லே. அரசின் தடையையும் மீறி வியட்னும் மக்களின் உரிமைகளுக்காக யாழ்ப்பாணத்தில் இவரின் தலேமையில் நடந்த மாபெரும் ஊர்வலத்தை மறக்கமுடியாது. பாட்டாளி வர்க்கத்திற்காகக் குரல் கொடுத்ததற்காக இவர் சிலகாலம் சிறைவாசமும் அனுபவித்தார்.

முன்பொரு சமயம் அவர் நோய்வாய்பட்டிருந்த காலத்தில் அவர் இறந்துவிட்டார் என்ற செய்தியைத் தவருக ஒரு பிரபல சிங்களப் பத்திரிகை வெளியிட்டது. அதனுல் அவரைச் செத்துப் பிழைத்த பூபாலர் என்றும் அழைப்பர். ''கோழைகள் வாழ்நாள் முழுவதும் செத்துப் பிழைக்கிருர்கள் ஆனுல் வீரன் மாணத்தை வாழ்வில் ஒருமுறைதான் தழுவி வீர மரணம் அடைகிருன்'' என்ருர் செகசிற்பியர். அவ்வாறே பூபாலர் வீரமரணம் அடைந்துவிட்டார்.

ஆனுல் அவர் விட்டுச் சென்ற புத்தகக் கழஞ்சியமும், அவருடைய செயற்பாடுகளும், செல்வ மக்களின் ''இவர் தந்தை என்நோற்ருன் கொல்'' என்ற சிறந்த பண்பாடும் ''எழுமையும் ஏமாப்புடையதாய்'' நின்று நிலேக்கும். திரு பூபால் அவர்கள் ஒரு நடமாடும் நூல்நிலேயம். எல்லாத் துறைகளிலும் பாண்டித்தியமுடையவர்-பொல்லாத பகைவரையும் நெஞ்சத்து அகமுருகவைற்கும் பண்பாளர். பின்னே திரிந்து எல்லோரையும் தோழர்களாக ஆக்குவதில் நண்பனுய், நல்லாசிரியனுய் அன்பனுய், இன்பமாய் இளநகைபூத்து எப்போதும் இனியனுய் எல்லோர்க்கும் நல்லவராய் இருந்தார்.

அவருடைய நிறுவனங்களும் அவருடைய இல்லமும் அடையா வாயில்களே உடையன. அவையெல்லாம் புத்தக ஆலயங்கள், சமதர்மக் கோயில்கள். ஊருணி நீர்நிறைந்தது போல அந்தப் பேரறிவாளன் திருவாகிய புத்தகச் செல்வம் எல்லோர்க்கும் எல்லாக் காலத்திலும் பயன் மரம் பழுத்தாற்போலப் பயன் பெற்றது. பாலர் முதல் பல்கலேக் கழகப் பேராசிரியர் வரை - அங்காடி வியாபாரி முதல்- அலுத்துப்போன தொழிலாளிவரை கேள்வி அறிவாலும், அவருடைய

---

''எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்''
— பாரதி

இலவச வாசிப்பு வசதியாலும் உலக, உள்ளூர் செய்திகளையும் அரசியல் விடயங்களையும் அசை போடுவார்கள். சில வேளைகளில் அவருடைய புத்தகசாலைகளின் தாவாரங்கள் அரசியல் மேடைகளாகவும், இலக்கிய மன்றங்களாகவும், பட்டி மன்றங்களாகவும், கவியரங்கங்களாகவும் மாறும். இதிலே வருவோர் போவோர் எல்லோருமே பங்குபற்றுவர். பல விடயங்களில் தெளிவும் விரிவும் பெற்றுச் செல்வர். அமைதியாக இருந்து தமது அலுவல்களைக் கவனித்துக் கொண்டும் அட்டாவதான மாக அங்கு நடக்கும் கலந்துரையாடலுக்குக் காது கொடுத்துக் கொண்டும் கணணியின் வேகத்தில் கருமமாற்றுவார் பூபால். இறுதியில் இரத்தினச் சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளில் எல்லோருடைய ஆங்குகளையும் முடித்து வைப்பார். அவற்றைத் தேவ வாக்காகக் கருதித் திருப்தியோடு திரும்புவார்கள். அவருடைய தோழர்கள் வாடிவதங்கும் வெய்யிலே, அவசர நரக வேதனையிலே ஓடி ஆடித் திரிவோருக்கு வெய்யிற்கேற்ற நிழலாகவும் வீசும் அறிவுத் தென்றற் காற்றாகவும் இவருடைய பெரியகடைப் புத்தக ஆலயம் மிளிர்கிறது. அது ஒரு அறிவு விருட்சம். ''வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி'' என்ற பாரதியின் கனவை நினைவாக்கிய கால்கோள் நிலையம்-யாழ் நூல் நிலையத்தை ஒருமுறைதான் எரித்தார்கள். இந்த அறிவு நிலையத்தை மூன்றுமுறை எரித்தார்கள் - கடை எரிந்துகொண்டிருந்தது-அனுதாபம் தெரிவிக்க வீட்டிற்கு வந்தோர்க்கு அன்னதானம் நடந்தது. அர்த்தராத்திரியில் அவர் வீட்டில் ஒரு பெரிய கூட்டம். அத்தனை பேரையும் வெளியில் விட்டால் அவர்கள் உயிருக்கு ஆபத்தெனக் கருதி அங்கேயே தங்கவைத்து அவர்தம் அருமருந்தனைய மனையாளும், பிள்ளைகளும் ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்தனர். ''முன்னையிட்டதீ முப்புரத்திலே அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே, பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்'' ''இப்போ இட்ட தீ வட இலங்கையில்'' என்ற வரிகளை முணுமுணுத்தபடி ''கொடுத்தவனே எடுத்துக்கொண்டான் மீண்டும் கொடுப்பான்'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தார். பூபால் அவர்களுக்கு மாக்சிச சித்தாந்தங்களில் எவ்வளவு பற்றுப்பிடிப்பும் இருந்ததோ அதேயளவு பற்றும் பிடிப்பும் பாரதியின் பாடல்களிலும், சைவ சித்தாந்தக் கருத்துக்களிலும் இருந்தது. ஆனால் ''கலையுரைத்த கற்பனைகளே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும் என்று அவர் போராடினார்.'' ''கிரேதயுகம் எழுகமாதோ'' என்ற பாரதியின் அடிகளை அடிக்கடி உச்சரிப்பார். மனத்திலே மாசில்லாமல் வாழ்தல் ஒன்றே அறமென வாழ்ந்தவர் - சக்தி உபாசகர்-சக்திக் கூத்தாடியவர்.

---

''ஏழையென்றும் அடிமையென்றும்
எவருமில்லை ஜாதியில்'' — பாரதி

தமிழ் நாட்டிலே உள்ள எழுத்தாளர்கள் அரசியல்வாதிகள், பிர சுராலயங்கள் மத்தியில் பெரும் மதிப்புப் பெற்றவர். அண்மையில் இந்தியா சென்றிருந்தபோது சிலம்புச்செல்வர், முதல்வர் M. G. R. கலைஞர் ஆகியோரை கண்டுவந்தார். இரண்டுமுறை சோவியத் நாட்டிற் குச் சென்று திரும்பினர். பிறநாட்டில் இருந்துவந்த பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்தோர்கள் அவர் தம் இல்லத்தில் சென்று அகமும் புறமும் மலர்ந்து செல்வர். தாம் பொன்னுடை போர்த்துக் கௌர வித்த தோழர் விக்கிரமசிங்கரவுடன் 1981-ல் சோவியத் நாட்டிற்குச் சென்றார். எதிர்பாராத விதமாக விக்கிரமசிங்கா அவர்கள் சோவியத் நாட்டில் காலமானது இவருக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. சோகமே உருவாக அவருடைய பூதவுடலைத் தாங்கிவரும் நிலையில் தாய்ப் பசுவை இழந்த கன்றுபோல் வேதனையடைந்தார். சென்ற இடங்களி லெல்லாம் அவருடைய இலட்சிய முத்திரையைப் பொறிக்க அவர் தவ றியது கிடையாது - அவர் உயிர் பிரிந்து செல்வதற்குச் சற்று முன்பு கூட அவர் பேசிய சிந்தனைகள் ஞானிகளுடைய போதனைகளைப்போல இருந்ததைத் தோழர்களும் நண்பர்களும் அறிவர் - ''எடே விரைவில் என்னைச் சிவப்புக் கொடியால் மூடிக்கொண்டு போகப்போகிறீர்கள்'' என்றார். ஆம் சிவப்பு, அதுதான் கருணையின் மறு நிறம்.

''உதிக்கின்ற செங்கதிர்-உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி எந்தன் விழுத்துணையே''

என்று சக்தியின் செவ்வண்ணச் சோதியை அபிராமிப் பட்டர் வியந்து போற்றுகின்றார். சக்திக் கூத்தாடிய பூபால் அவர்கள் அன்னை யின் கருணை வடிவமான செவ்வண்ணக் கொடியில் சங்கமானது பொருத்தமானதே.

''பொது உடமை ஒப்பில்லாத சமுதாயம் உலகத்துக் கொரு புதுமை''
— பாரதி

''மாகாளி பராசக்தி உருசிய நாட்டிற் கடைக்கண் வைத்தாள்
— அங்கே

ஆகாவென் றெழுந்துபார் யுகப்புரட்சி கொடுங்கோலன் அலறி
வீழ்ந்தான்''
— பாரதி

மரணம் நிச்சயமானதுதான் - என்றாலும் பூபாலரின் மரணம் எம் மையெல்லாம் ஆழாத்துயரில் அமிழ்த்திவிட்டது. அவர் ஒரு அதிசய மனிதர் - அபாரமான அழுமையுடையவர் - என்செய்வது ''எல்லாம் எப்பவோ முடிந்தகாயிற்று'' 'ஒரு துன்பமுமில்லை'' அவருடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

நா. க. சண்முகநாதபிள்ளை
அதிபர்
நயினாதீவு மகா வித்தியாலயம்.

# முதல்வரின் இரங்கற் செய்தி

மார்க்சிய லெனினிச சித்தாந்த ஆதாரத்தில் தொழிலாளர், விவசாயிகளின் ஆட்சியைப் புரட்சி வழியில் நிறுவவேண்டுமென்பதையே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இலங்கியவர் தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம்.

தோழர் பூபாலசிங்கம் அவர்களின் திடீர் மரணம் வடபகுதியைச் சேர்ந்த முற்போக்கு அணியினருக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

தோழர் பூபாலசிங்கம் அவர்கள் வடபகுதி மக்களின் அறிவுப் பசிக்கு ஊட்டம் அளிக்க வேண்டுமென்ற பெருவிருப்புக் காரணமாகவே புத்தக விற்பனையைத் தமது தொழிலாக எடுத்துக் கொண்டார். அன்னாரது புத்தக விற்பனை நிலையங்கள் யாழ் நகரின் மையமான மூவேறு இடங்களில் அமைந்திருப்பது யாவரும் அறிந்ததே.

தமிழ் மக்களின் கல்வி விருத்திக்குக் கேடு சூழவேண்டுமென்று திட்டமிட்டவர்கள் 1981 ஜூன் முதல் நாளில் தமிழ் மக்களின் பாரம் பரிய பண்பாட்டின் பெட்டகமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் பொது சன நூல் நிலையத்தைத் தீயினால் பொசுக்கிய போது, தோழர் பூபாலசிங்கம் அவர்களுடையநிறுவனங்களையும் விட்டு வைக்காமைக்குக் காரணம் அவற்றின் முக்கியத்துவம் கருதியே.

தோழர் பூபாலசிங்கம் அவர்கள் மேற்படி அழிவுகளினால் தமக்கு ஏற்பட்ட சொந்த இழப்பின் மத்தியிலும் யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்தை மீள்வித்துப் புதுப்பிப்பதில் பெரும் ஆர்வத்தோடு உழைத்து வந்தார். சம்பவித்த நிகழ்வுகளை அடுத்து தோழர் கெனமன் அவர்களது வடபகுதி வருகையைத் தொடர்ந்து அவை குறித்து தென் பகுதி மக்களும் உண்மைகளை உள்ளது உள்ளபடி அறியவரும்வகையில் தாம் சார்ந்த இயக்க ஏடுகளில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் செய்திகள் வெளிவரப் பார்த்துக் கொண்டார். தமிழக இயக்கத் தோழர் கலியாணசுந்தரம் அவர்களூடாக நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் தமிழக அரசும் தமிழக மக்களும் அறியும்படி செய்தார். அங்குள்ள ஒரு வர்த்தக தாபனத்தின் மூலம் புத்தகங்களை அன்பளிப்பாகத் தருவித்து, கொழும்பிலிருந்து நூலகத்துக்கு அவற்றை எடுத்துவரும் செலவுடன் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்ள முன்வந்தார். தமது சோவியத் விஜயத்தின் போதும் யாழ். நூலக மீள்விப்புக்கு உதவும் பணிகளை அவர் மறந்துவிடவில்லை.

தோழர் பூபாலசிங்கம் அவர்கள் பொது மக்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பொதுப் பிரச்சினையிலும் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தத் தயங்காத துணிவுடையவராக விளங்கி வந்த ஒரு பெரியாராவார்.

தோழர் பூபாலசிங்கம் அவர்களது மறைவால் வாடும் அன்னாரது துணைவியாருக்கும், அவர் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இராஜா விசுவநாதன்
மாநகர முதல்வர் யாழ்ப்பாணம்.



"புத்தகத்துறையும் புத்துணர்வதனை
வித்தகர் அமிருடன் விளக்கும் மாட்சி"

## யாழ்-பாராளுமன்ற உறுப்பினரின்

# அனுதாபச் செய்தி

புத்தக நிலையமென்றவுடன் பூபாலசிங்கம் அவர்களின் நினைவே எமக்கு உடன் எழுகின்றது. தமிழ் ஈழத்தில் புத்தக வியாபாரத் துறையில் நெடுங்காலக் கீர்த்தியும் அனுபவமும் மிக்க அன்னாரின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னார் அன்பு, பண்பு, ஆற்றல், இரக்கம் மிகுந்த பொதுநலப் பணியாளர் என்பதை நாடு நன்கறியும். இளமையிலேயே இடதுசாரித் தத்துவங்களால் ஈர்க்கப்பட்டு இறுதிவரை அச்சுவட்டிலே இம்மியும் பிசகாது பணிபுரிந்த பண்பாளர் அவர்.

தமிழ் ஈழத்திலே ஆட்சியாளரின் ஆயுதம் தாங்கிய படையினர் நடாத்திய அனர்த்தங்களில் மும்முறை அவரது ஸ்தாபனம் தீக்கிரையான போதும் துவண்டுவிடாத துணிவு மிக்கவர். ஈழத்துப் படைப்புக்களின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவர். எமது மக்களின் புத்தக ரசனையை நன்கறிந்த அவரின் மறைவு தமிழ்கூறும் நல்லுலகின் போதாத காலத்தை நமக்கு நினைவுறுத்துகிறது. அன்னாரின் மறைவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெ. யோகேஸ்வரன்
(யாழ். பா. உறுப்பினர்)

---

"தானம் வேள்வி தவங் கல்வியாவும்
தரணி மீதில் நிலைபெறச் செய்வேன்" — பாரதி

# எண்ணிய கருமந்தன்னை விரைவில் எழிலுற முடிக்கும் கர்மவீரர்

திரு. இ. இ பூபாலசிங்கம் அவர்களின் மறைவினுலே புத்தக உலகமும் தமிழினமும் அடைந்த இழப்பு பேரிழப்பாகும். தனிப்பட்ட வாழ்விலும், வர்த்தகத்துறையிலும் அவருக்குரிய தீர்க்கமான போக்கும் அவர் ஆற்றிய பணிகளும் நெஞ்சிற் பசுமையாய் நிறைந்தே கிடக்கின்றன.

பூபாலசிங்கமவர்கள் சிறுவயதிலிருந்து புத்தகத் தொழிலில் இறங்கி வளம்பல கண்ட சீமான். 1945-ம் ஆண்டிலே அவர் நிறுவிய பூபாலசிங்கம் புத்தகசாலை மூன்று தடவை தீக்கிரையானது. ஐந்து கடைகள் எரிந்து சாம்பலாகின. ஆனுல் அவர் மனம் தளரவில்லை; கடையை மூன்று முறை புதுக்கி அமைத்தார். எண்ணிய கருமந்தன்னை விரைவில் எழிலுற முடிக்கும் வீரன் என்பதனைச் செயலிற் காட்டினர்; வர்த்தகத் துறையினர்க்கு ஒரு வழிகாட்டியாக, அற்புதப்பணிபுரிந்து, அனைவரும் மதிக்கும் செம்மலாகத் திகழ்ந்தார். அவரின் திண்ணிய நெஞ்சும் எதையும் தீர்க்கமாய்ச் செய்யும் வன்மையும் பிறர்க்கு எடுத்துக்காட்டாக அமைந்தன. பூபாலசிங்கம் புத்தகசாலை தமிழறிஞர் சந்திக்கும் ஓர் அறிவுக் கூடமாகக் காட்சியளிக்கின்றது.

அறப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி, சமயப்பணி, பொதுப்பணி எனப் பல்வேறு பணிகளிலும் தம்மை இணைத்துக்கொண்டு கடமையாற்றிய நல்ல பண்பாளர். வடபகுதியிற் பொதுவுடைமைக் கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து ஆரம்ப உறுப்பினராக உழைத்துவந்தார். தீவுப்பகுதி மோட்டார்வள்ள சபையைத் தொடக்கிவைத்த பெருமையும் அவருக்குண்டு.

ஆலயமெங்கிலும் அறப்பணி செய்ய ஆர்வமாய் உழைத்தவர் பூபாலசிங்கம் அவர்கள். நயினுதீவுக் கோயிலின் வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமாயிருந்த இச்சீலர் நயினுதீவு அன்னதானச் சபைமூலம் செய்த தொண்டுகள் பல.

எந்நேரமும் எவர்க்கு உதவியானுலும் ஏற்றிடும் எழிமையாளராகக் காட்சியளிக்கும் செம்மலின் கொடையினுல் முன்னேற்றமடைந்த சங்கங்கள் பல; நனிநபர்கள் பலர். தம்மை அண்டினேர்க்கு அபயமளிக்கும் அண்ணலை இழந்து இன்று தவிக்கின்றேம். அவர் விட்டுச்சென்ற இடைவெளியை அவரின் பிள்ளைகள் நிரப்புவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. நன்மைக்கு அழிவில்லை.

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

# மனம் நெகிழும் அனுதாபங்கள்

நண்பர், பூபாலசிங்கம் மறைந்துவிட்ட செய்தி கிட்டிற்று. நம்பவே முடியவில்லை. வாழ்க்கையின் சில ஓட்டங்கள் இத்தகைய நம்பிக்கையீனங்களிலே தான் தங்கியிருக்கிறது போலும்.

நண்பர் பூபாலசிங்கம் எங்கள் இலக்கிய வாழ்வின் ஓர் அங்கம். யாழ்ப்பாணத்து இலக்கிய வாழ்க்கையில் அவருக்கு முக்கிய இடமுண்டு.

தோழமை நிறைந்த வாழ்க்கை யொன்று முடிந்துவிட்டது. அந்தரங்க சுத்தியுடன் பழகிக் கொண்டவர்களுக்கு அவர் அன்பின் ஆழம் தெரியும். அந்த நட்புரிமையை அனுபவித்தவன் என்கிற வகையில் நான் அவரது இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாதவனுக இருக்கிறேன்.

இங்கு இருக்கும் பொழுது தெரியாது, நான் யாழ்ப்பாணத்துக்கு வந்து, 751 பஸ்ஸால் இறங்கி, 764 க்குப் போவதற்கு முன், புத்தகக்கடைக்குள் எட்டிப்பார்க்கும் பொழுதுதான் அந்த வெற்றிடம் எனக்குப் புலப்படப் போகிறது.

குடும்பத்தவர்களுக்கு என் மனம் நெகிழும் அனுதாபங்கள்.

கார்த்திகேசு சிவத்தம்பி

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

---

''வானம் மூன்று மழைதரச் செய்வேன்
மாறிலாத வளங்கள் கொடுப்பேன்'' — பாரதி

# மனிதகுல மாணிக்கம்

மணிபல்லவத்திற் பிறந்தவரும் மக்களின் நலனுக்கா காகவே தமது வாழ்வை அர்பணித்துக்கொண்டவரும் சமா தான நீதிபதியுமாகிய திரு ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர் களோடு பல்லாண்டுகள் பழகும் பேறுபெற்றேன். எவரோ டும் அன்பாகப் பழகும் பண்பும், இனிமையாகப் பேசும் சுபாவமும், சிந்தித்துச் செயலாற்றும் திறமையும் வாய்ந்த அன்பரை இடையிலேயே பறிகொடுத்தமையால் தமிழினமே தத்தளித்த நிலையை நேரில் காணக்கூடியதாக இருந்தது.

மக்கள் பணி மகேசன் பணியெனக் கொண்டு வாழ்ந்த பெரியார், பிறந்தகமான நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய அன்னதானப் பணியிலும், சோசலிசமே மக்களுக்கு மலர்ச்சியையும், வாழ்வையும் அளிக்கவல்லது என்பதை உணர்ந்து பலதடவைகள் ருஷ்சியாவுக்குச் சென்று ஏழை மக்களின் வாழ்வு வளம்பெறப் பணியாற்றி மும்முறை தம் உடைமையான புத்தகசாலை எரிக்கப்பட்டபோதும் மனந்த ளராது, தம்து இல்லத்தையே நூலகமாக மாற்றியதோடு தம் குழந்தைகளையும் அதே வழியைப் பின்பற்றவைத்த பெருந்தகையைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தினருக்கும், சமூகத்தினருக்கும் தேறுதலளித்து அவர் சென்ற வழியைத் தொடரவைக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல பரம்பொரு ளைப் பிரார்த்திக்கிறேன்.

வாழ்க அமரர் பூபாலசிங்கம் நாமம்! வளர்க அவர்தம் அன்புக் குழந்தைகள்!!

சைவமணி, சித்தாந்தச் செம்மல்
வித்துவான் மு. சபாரெத்தினம் அவர்கள்

---

''மானம் வீரியம் ஆண்மை நன்னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்'' — பாரதி



தன்னுயர் ''விக்ரமர்'' தமக்கு அரங்கில்
பொன்னுடை போர்ப்பும் புன்சிரிப்புதிர்ப்பும்.



''நாடுதிரும்பிய நன்மகன் விழாவின்
ஊடுதாயின் உவப்பும் களிப்பும்''

# ஓர் இலட்சியவாதி

அமரர் ஆர். ஆர். பூபாலசிங்கம் தனது சிறுவயதிலிருந்தே தனது வாழ்க்கையை ஒரு இலட்சியத்திற்காக அர்ப்பணித்தவர்.

தனது சொந்த வாழ்வில் ஏற்பட்ட கஸ்டங்களேயும், நஸ்டங்களே யும் பொருட்படுத்தாது தனது லெட்சியத்தில் உறுதியாக நின்றவர். மனிதனே மனிதன் சுரண்டுவது இனத்தை இனம் அடக்குவதும் ஒழிக் கப்பட்ட ஓர் சமத்துவமான சுதந்திர சோசலிஸத்தை நோக்கி முன் னேறும் — இதுவே அவரது இலட்சியமாகும்.

அவரது கனவு இன்று சோவியத் யூனியன் மற்றும் ஐரோப்பிய ஆபிரிக்க ஆசிய தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் இன்று சுடர் விட்டு வளர்ந்து வருகின்றது. இது சகிக்க முடியாத ஏகாதிபத்திய நாடுகள் உலக மக்களேயும் கலாசாரத்தையும் அழிக்கக்கூடிய மட்டுப் படுத்தப்பட்ட அணு ஆயுதப்போரைக் கட்டவிழ்த்துவிட கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிருர்கள். இந்த அணு ஆயுதப் போரைத் தடுப்பதே முற்போக்கு மக்களின் தலேயாய கடமையாகும்.

இதனே உணர்ந்த அமரர் பூபாலசிங்கம் இலங்கை சமாதான சபையின் யாழ். கிளேயின் உறுப்பினராக சேர்ந்து சமாதானத்திற்கான தனது பங்களிப்பை நல்கி வந்தார். உலகளாவிய சமாதான சபை அணு ஆயுதப்போரை எதிர்த்து உலக மக்களின் பேரணியைத் திரட்டி வருகின்றது. இச்சபை மூன்ரும் உலக நாடுகளின் சுதந்திரத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் குறிப்பாக பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும் அரசுரிமைக்கும் போராடி வருகின்றது.

முற்போக்கு இயக்கங்கள் போராட்டத்தை ஆரம்பித்தாலும் அதற்கு முன்னு தவியும் உந்து சக்தியாகவும் திகழ்ந்தவர் அமரர் பூபாலசிங்கம் அவர்கள்.

அவரது இலட்சியத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்தி எல்லா இன மக்களும் சமத்துவ அடிப்படையில் இஸ்டபூர்வமான ஒற்றுமை யில் சோசலிஸத்தை நோக்கி முன்னேறும் இலங்கையை அமைப்பதே அன்னருக்கு நாம் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.

அ. வைத்திலிங்கம்
தலேவர்
வட பிராந்திய கம்யூனிஸ்ட்கட்சி

---

''மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொழுத்துவோம்'' — பாரதி

# எங்கள் தோழர்

இவ்வுலகில் தாம் கொண்ட கொள்கைக்காக, இலட்சியத்திற்காகத் தம் வாழ்நாளை அர்ப்பணித்து வாழ்ந்துவரும் மக்கள் தொகை அருகிவருவதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது. சுயநலத்திற்காக உன்னத குறிக்கோள்களையே குழிதோண்டிப் புதைத்துவிட்டு அற்ப சொற்ப ஆதாயத்திற்காக அடிக்கடி நிறம் மாறும் பச்சோந்தி மனிதர்களையும் எம்மால் இனங்கண்டுகொள்ள முடிகின்றது. ஆயினும் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக; மனிதகுலத்தின் விடுதலை சகல நிலைகளிலும்; நம் நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி; அனைத்துலக மக்களுக்கும்; மாக்சிய நெறியிலேயே மலரும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் தன்னை 1940-ம் ஆண்டுகளில்' இருந்து இறக்கும்வரை இடதுசாரி இயக்கத்துடன் இணைத்துக் கொண்டவர் அண்மையில் அமரராகிய எங்கள் தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள்.

தோழர் பூபாலசிங்கம் அவர்கள் தமது இளமைப் பருவத்திலிருந்தே; சமூக சீர்திருத்தம், சமரசநோக்கு என்பவற்றால் கவரப்பட்ட முற்போக்குச் சிந்தனையுடையவராகக் காணப்பட்டதனாலேயே ஆரம்பத்தில் லங்கா சமசமாஜக் கட்சியிலும் அதன்பின் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் உறுப்பினராகச் சேர்ந்து பல உரிமைப் போராட்டங்களில் பங்குபற்றினர். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பும், பின்பும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களிலும், தொழிலாளர்களின் உரிமைப் போராட்டங்களிலும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களிலும் எம்மோடு தோளோடு தோள்நின்று தமது பங்களிப்பினைத் தந்த செயல்வீரன் ஆவார்.

தோழர் அவர்கள் பத்திரிகைகளின் விற்பனைத் துறையில் ஈடுபட்டு இலங்கைத்தீவு எங்கும் புகழ்பெறக் காரணமான ஆரம்ப பயிற்சியை. சமதர்மம், மாணவர் செய்தி, தேசாபிமானி போன்ற கட்சிப் பத்திரிகைகளை தமிழ் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தி விற்பனை செய்ததன்மூலம் பெற்றுக்கொண்டார் என்றால் அது மிகையாகாது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் குழுவில் உறுப்பினராகவும், அதன் தனாதிகாரியாகவும் இருந்து சேவையாற்றினர். தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு, சோஸலிச நாடுகளுக்கு நல்லெண்ண விஜயம் செய்துவந்தார். தோழர் அவர்கள் கம்யூனிஸ் கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டதுடன் தான் பிறந்த தனது ஊரான

---

''வீணருக் குழைத்துடலம்
ஓயமாட்டோம்'' — பாரதி

நயினாதீவின் முன்னேற்றத்திலும் கூடிய கவனம் செலுத்தித் தனது பங்களிப்பினை வளங்கினார்.

தோழர் அவர்கள் சொந்த வாழ்வில் எல்லோருக்கும் இனியவராக வும், உபகாரியாகவும் வாழ்ந்துள்ளார். சொந்த வாழ்வில் பல கஷ்ட நஷ்டங்களும், பொருளாதார இழப்புக்களும், ஏற்பட்டபோதும், மனம் சளைக்காமல், இலட்சியத்தைக் கைவிடாமல், திட நெஞ்சுரத்துடன் எல்லாவற்றையும் சகித்து வாழ்வில் முன்னேறியவர்.

1937-ம் ஆண்டில் இருந்து தோழர் பூபாலசிங்கத்துடன் நான் தோழமை பூண்டிருந்தேன். கட்சித் தோழர்கள் யாராவது தவறுகள் செய்ய நேரிடும்போது அவர்களது தவறுகளை விமர்சனம் செய்து சரி வழியில் தோழர்களை நெறிப்படுத்தியும் உள்ளார்.

தோழரின் மறைவு அவரின் குடும்பத்தினருக்கும், சுற்றத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஏற்படுத்திய இழப்பைவிட, இந்நாட்டு முற்போக்கு இயக்கங்களுக்கும், பிரதானமாகக் கம்யூனிஸ்கட்சிக்கும், ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், சுற்றத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்ப துடன் அன்னாருக்குச் செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செய்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைக!
வாழ்க தோழர் நாமம்!!

எம். ஸி. சுப்பிரமணியம்
இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி,
யாழ் மாவட்ட அமைப்பாளர்

''பூமியில் எவர்க்குமினி
அடிமை செய்யோம்'' — பாரதி

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
யாழ்-மாவட்ட
உதவிச்செயலாளரின்

# அனுதாபச் செய்தி

ஆர் ஆர். பி எனவும் பூபால் எனவும் தோழர்களாலும், நண்பர்களாலும், அன்பாக அழைக்கப்படும் தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம் இயற்கை எய்தியதை நம்பவே முடியவில்லை. இன்றும் கூட எமது மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவராகவே தென்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் அன்னாரின் வாழ்க்கை கொள்கைப் பிடிப்புள்ள லட்சிய வாழ்வாக அமைந்ததாகும்.

நான்கு சகாப்தங்களுக்கு முன்பாகவே மாக்சீச லெனினிச கொள்கைகளில் நம்பிக்கை வைத்து சோசலிச சமூக அமைப்பை உருவாக்க பாடுபட்டார். 1982-ம் ஆண்டில் கூட எமது செயல்பாடுகளுக்கு பல முட்டுக் கட்டைகள் எதிர்நோக்குகின்றன. அப்படியிருக்க தோழர் பூபாலசிங்கம் அக்காலகட்டத்தில் எப்படி செயல்ப்பட்டார் என்பதை கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை.

யாழ் பிரதேசத்தில் எமது கட்சியின் கிளையை ஆரம்பித்த முக்கியஸ்தர்களில் ஒருவர். அவரின் வாழ்க்கை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. அத்துடன் உலக சோசலிச இயக்கங்களின் நண்பனாகவே கடைசிவரை வாழ்ந்தவர்.

அயலாரின் எதிர்ப்பு ஒரு புறமும் அரசாங்க எதிர்ப்பு மறுபுறமும் இருக்கையில் எல்லாவற்றையும் எதிர்கொண்டு வாழ்க்கையை நடத்திய தோழருக்கு நாம் செய்யும் பிரதி உபகாரம் அவர்கண்ட லட்சிய சமுதாயத்தை அமைக்க எமது பங்களிப்பை செய்வதாகும்.

**எஸ். விஜயானந்தன்**

---

'வீணில் உண்டுகளித்திருப்போரை
நிந்தனை செய்வோம்'' — பாரதி

# День за днем

● ГОСТИ ВОЛГОГРАДА

# Посланцы Шри Ланка



Два дня в Волгограде гостили активисты Коммунистической партии Республики Шри Ланка тт. Папаласингам и Фернандо (ответственный секретарь газеты «Форвард») Они побывали на исторических местах города, совершили экскурсии на Мамаев курган, Волжскую ГЭС им. XXII съезда КПСС. Гости смотрели документальные кинофильмы о Сталинградской битве и возрождении города-героя.

Делясь впечатлениями, тов. Фернандо сказал. «Поездка в СССР имеет для нас большое значение. Мы изучаем опыт деятельности Коммунистической партии вашей страны, в том числе партийных организаций Волгограда Это поможет нам в практической работе»

Вчера активисты Коммунистической партии Республики Шри Ланка были гостями журналистов «Волгоградской правды». Они особенно интересовались организацией работы газеты, связями ее с широким активом.

**НА СНИМКЕ:** гости из Шри Ланка в редакции «Волгоградской правды»

Фото А. ЯИЦКОГО

● НИКТО НЕ ЗАБЫТ

“ரஷ்ய நாட்டில் உலாவரும் போது
பசிய நினைவுகள் பகிர்ந்திடும் காட்சி”

# வேதனை தந்த மறைவு

தோழர் பூபாலசிங்கம் காலமானார் என்ற துக்கச் செய்தியை இலங்கை மண்ணில் இறங்கியவுடன் கேட்க நேரிட்டது எனது துரதிஷ்டமாகும். தோழர் பூபாலசிங்கத்தை ஒரு முறை சென்னையில் சந்தித்துள்ளேன். கட்சியின் பத்திரிகை, புத்தகங்களில் அதிக அக்கறை காட்டி வந்தார்.

யாழ்ப்பாணத்தில் அவருடைய புத்தகக் கடை எரியூட்டப்பட்ட செய்தியைப் பத்திரிகைகளில் படித்து நாங்களும் கொதிப்படைந்தோம். இனி கடையை அவர் நடத்துவரா? என்ற ஐயமும் எழுந்தது.

தோழர் கல்யாணசுந்தரம் எம். பி. அவர்கள் ஈழத்திற்குச் சென்று திரும்பிய போது செய்திகளையும், சில புகைப்படங்களையும் கொண்டு வந்தார். எரியுண்ட கடையினைப் படத்தில் பார்த்தோம். ஆனால் இன்னொரு படத்தில் புன்முறுவலுடன் கல்யாணசுந்தரத்துடன் உரையாடிக் கொண்டிருந்த காட்சியையும் பார்த்தோம். கடையை எரித்தவர்களால் அவரது நெஞ்சுறுதியைப் பொசுக்க முடியவில்லை என்பது கண்டு மகிழ்ந்தோம். ஆனால், நான் வந்து பார்க்கும் முன்......!

அவரது இல்லத்திற்குச் சென்று மாலையிடப்பட்ட அவரது படத்தையே காண நேரிட்டது. சோகமே வடிவெடுத்து அமர்ந்துள்ள அவரது துணைவியாரையும், குழந்தைகளையும் பார்ப்போருக்கு நெஞ்சு பதறுகிறது. தேறுதல் சொல்ல சொற்கள் கிட்டவில்லை.

முற்போக்கு நூல்களையும், செய்தித்தாள்களையும் விற்பனை செய்வதன் மூலம் நற்பணி புரிந்து வந்தவரை இழந்தது, இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு மட்டுமல்ல, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் பெரும் பேரிழப்பாகும். அவருடன் பழகிய தோழர்கட்கு அவரது இழப்பும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அனைவருமே அவரது துவளாத நம்பிக்கையையும், நெஞ்சுறுதியையும் பாராட்டிப் பேசக் கேட்டேன்.

தந்தை வழியில் மகன் நிற்பதைக் கண்டு சற்றே நிம்மதியும் பெற்றேன்.

தோழர் பூபாலசிங்கத்தின் அன்புக்குரியோராய் வாழ்ந்த குடும்பத்தார்க்கும், உடன் பழகிய தோழர்கட்கும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன். பூபாலசிங்கம் அவர்களின் நாமம் வாழ்க!

தா. பாண்டியன்
சென்னை

# பூபாலுக்கு புரட்சிகர அஞ்சலி

தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம் நம்மை விட்டு மறைந்துவிட்டார். அந்த சோகம் எம் மனதைவிட்டு இன்னும் அகலவில்லை. அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினரைப் போன்றே நாமும் தோழர் பூபாலசிங்கத்தின் மறைவால் வேதனைப்படுகிறோம் — விம்மி அழுகிறோம்.

ஏன் இவ்வாருற்றோம் என்பதையறிய அவரின் கடந்தகால வாழ்க்கையை சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பது நன்று. நான் குறிப்பிடுவது எமது கட்சியுடனும், எம்முடனும், பொதுவில் இந்நாட்டு இடதுசாரி இயக்கத்துடனும் அவர் கொண்டிருந்த, இறுதிவரை விடுபடமுடியாத பிணைப்பையேயாகும்.

தமது 15 வயதிலேயே அரசியலில் ஈடுபாடுகொண்ட அவர் இடதுசாரிகளினதும் முக்கியமாக சமசமாஜக் கட்சியினதும் இலக்கியங்களை மக்களிடையில் கொண்டுசென்று விநியோகித்தார். அந்த இளமைப் பிராயத்திலேயே மக்கள் இடதுசாரி இலக்கியங்களைக் கற்றறிந்தால்தான் உண்மை விளங்கும். அப்பொழுதுதான் அவர்கள் எதிர்காலத்தில் இடதுசாரிகளைத் தழும்பலின்றி ஆதரித்து நிற்பர் என்ற சத்தியத்தை உணர்ந்திருந்தார். அத்துடன் உழைக்கும் மக்கள் படும் அல்லல்களைத் துடைத்திடவும், அவர்களை ஸ்தாபனங்களில் ஒன்று திரட்டிப் போராட்டங்களில் ஈடுபடுத்தவும் அப்பொழுதுதான் சாத்தியம் ஏற்படுமென விசுவாசித்து மனங்கொண்டு மாசற்ற பணியாற்றினர்.

அவரின் அரசியல் வளர்ச்சியுடன் காலப்போக்கில், சிறுபான்மை இனங்களின், முக்கியமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வு சோஷலிஸ அமைப்பின் வாயிலாகத்தான் காணமுடியுமென உணர்ந்ததினால், அதன் பொருட்டு இந்நாட்டில் தேசிய ரீதியாக இயங்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்தார். அதன் கிளையை யாழ் பிரதேசத்தில் நிறுவத் தமது முழு ஆதரவையும் நல்க முன் வந்தார். அவ்வமயம் தோழர்கள் எம். ஸி. சுப்பிரமணியம், எஸ். இராமசாமி ஐயர், எம். கார்த்திகேசன், எஸ். கே. கந்தையா ஆகியோர் வட பிரதேசத்தில் தமிழ் மக்களிடையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையொன்றை நிறுவிட முழுமூச்சாக உழைத்து வந்தனர். அவர்களுடன் தோழர் பூபாலசிங்கமும் இணைந்து இக்கிளையை நிறுவிய ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரானர்.

---

''தனி யொருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்'' — பாரதி

தமது இளமைப் பிராயத்தில் கட்சியின் நடவடிக்கைகளில் துணிவுடனும், இயக்க உணர்வுடனும் தீவிரமாக ஈடுபட்டார். இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு ஒரு துண்டுப்பிரசுர விநியோகத்தின்மீது அவர் குற்றங் காணப்பட்டு அன்றைய ஆட்சியாளரால் சிறைவாசத்திற்கு உட்படுத்தப்பட்டதாகும்.

பின்னர், யாழ் பிரதேசத்தில் கட்சியின் மாவட்டக்குழு அமைக்கப்பட்டு இயங்குங்காலை அதில் செயல்க்குழு அங்கத்தவராகவும், பொருளாளராகவும் கடமையாற்றினர். இக்காலத்தில் இப்பிரதேச தொழிற் சங்க இயக்கத்திலும், கட்சி அணிகளிலும் தாம் இயங்குகையில் கடுமையான தமது உழைப்புடன் பொருளுதவியையும் நல்க அவர் பின் நிற்கவில்லை.

தமிழ் மக்களிடையில் மார்க்ஸிஸ இலக்கியத்தைப் பரப்பும் அரும் பணியில் தாமே இவ்விலக்கியங்களைச் சுமந்து சென்று வட இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசமெல்லாம் விநியோகித்தார். இவ்விடாமுயற்சியின் பிரதிபலனாக இத்துறையில் ஒரு புத்தகக் கடையையே நிறுவினர். முக்கியமாக அக்கால சூழ்நிலையில் மக்கள் வாங்கவோ—விற்கவோ பின்னடையும் மார்க்ஸிய நூல்களை இவர் துணிந்து தமது கடையில் வைத்து விநியோகித்தார். இதன் பொருட்டு பல எதிர்ப்புகளைத்தானும் மனந்தளராது சமாளித்துள்ளார்.

யாழ் பிரதேசத்தில் அண்மையில் நடத்தப்பட்ட அரச பயங்கரவாதத்தின் பிரதிபலனாக தோழர் பூபாலசிங்கத்தின் புத்தகக்கடை கொடுங்கோலர்களால் தீயிடப்பட்டுக் கொழுத்தப்பட்டது. பல இலட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இதுகூடத் தமிழ் மக்களிடையில் மார்க்ஸிஸ இலக்கியத்தை நீண்ட காலமாகப் பரப்பி வருவதைப் பொறுக்காத அதன் எதிர்ச்சக்திகள் கட்டவிழ்த்துவிட்ட அநியாயங்களின் தொடர் நிகழ்ச்சியாகவே தென்படுகின்றது. எனினும் ஒரு முழு அழிவைச் சந்திக்க நேரிடினும்—தமது ஆவி பொருள் அனைத்தையும் இழக்க நேரிடினும் மார்க்ஸிஸ இலக்கியங்களைப் பிரச்சாரப்படுத்தும் பணியை நாம் நிறுத்தப் போவதில்லையென சூளுரைத்து அப்பணியை முன்னெடுத்துச் சென்றூர்.

சோஷலிஸ நாடுகளுடனான நேச உறவை ஏற்படுத்தவும், அதை வளர்த்திடவும்—அதே வேளையில் உலக சமாதானத்தின் இன்றைய அவசியத்தை உணர்ந்தவராகவும் அதன் பொருட்டுத் தமது பிரதேச

---

''குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி எழ வேண்டும்''

— பாரதி

மக்களை அணிதிரட்டவும் முன்னேடியாகப் பணியாற்றினர். சோவியத் யூனியன் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு—செக்கொஸ்லாவாக்கிய—கியூபா ஆகிய நாட்டு மக்களுடனை நட்புறவுச் சங்கங்களை வட பிரதேசத்தில் நிறுவிடவும், அவைகளைப் போஷித்து வளர்க்கவும் முக்கிய பங்கு வகித்துள்ளார். அதேபோன்று சமாதான சபையின் கிளை தாம் வாழும் பிரதேசத்தில் நிறுவுவதிலும் பங்காற்றியுள்ளார். ஆகவே தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விழைந்த அதே போக்கிலேயே சர்வதேசிய பிரச்சினைகளிலும் தாம் கம்யூனிஸ்ட்வாதி என்ற வகையில் பங்குப்பணியாற்றியுள்ளார்.

அவரது வாழ்க்கைக் காலத்தில்தான் ஒரு சர்வதேசியவாதி என்ற உணர்விலும், தேசிய ரீதியில் பிற்போக்குச் சக்திகளை எதிர்த்துப் போராடியதுடன் அவ்வப்போது நமது இயக்கத்தில் முளைவிட்ட சந்தர்ப்ப வாதப் போக்குகளையும் நேருக்குநேர் முகங்கொடுத்து முறியடிக்கவும் அவர் போராடியுள்ளார்.

எனவே இத்தகைய ஒரு தோழரை இழந்துள்ள நாம், யாழ் பிரதேசத்திற்கு மாத்திரமல்ல கம்யூனிஸ்ட் கட்சிக்கும், முழு இடதுசாரி இயக்கத்திற்கும் ஏற்பட்ட ஒரு இழப்பாகவே இதை நாம் கருதுகிறேம்.

தோழர் பூபாலசிங்கத்தின் மறைவையிட்டு நாம் எமது நெஞ்சாழ்ந்த துக்கத்தை மீண்டுமொருமுறை வெளிப்படுத்திக்கொள்கிறேம். அத்துடன் அவரை இழந்து ஆருத் துயருற்றுள்ள மனேவி—பிள்ளைகள், உற்ருர்—உறவினர்கள், தோழர்கள்—நண்பர்கள் அனைவருக்கும் எமது அநு தாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

இறுதியாகத் தோழர் பூபாலசிங்கம் விசுவாசித்துப் பின்பற்றிய கொள்கையின் துவஜத்தை உயர்த்திப் பிடித்து அவரின் பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோமென சங்கற்பம் ஏற்பதுடன், அன்னருக்குச் செங்கொடி தாழ்த்தி எமது புரட்சிகர அஞ்சலிகளை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், எனது சொந்த முறை யிலும் தெரிவித்துக்கொள்கிறேம்.

வணக்கம்

இங்ஙனம்
கே. பி. சில்வா
பொதுச் செயலாளர்
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

91, கொட்டா ரேட்,
கொழும்பு-8.
12-08-1982.

---

''அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை என்று அறிக'' — பாரதி



''உலகளாவிய தோழர்கள் மத்தியில்
நிலைகொள் பூபால் நின்றிடும் காட்சி''



''இந்தியத் தோழர் கல்யாண சுந்தரர்
தந்த சேவையில் தனிப்பெரும் குடும்பம்''

சரித்திரக்கதைச் செம்மல், முத்தமிழ் வித்தகர்
அமுதசுரபி ஆசிரியர்
டாக்டர் விக்கிரமன் அளிக்கும்

# அஞ்சலி

இலங்கைக்குச் செல்லப் போகிறேன் என்று நான் அறிவித்தபோது யாழ்ப்பாணத்திற்குச் செல்ல மறந்துவிடாதீர்கள் என்று நண்பர்கள் கூறினர்கள்.

ஆம், யாழ்ப்பாணம் செல்லப்போகிறேன். அதுவும் முதலில் யாழ்ப் பாணம் சென்றபிறகே இலங்கையின் மற்ற பகுதிகளைச் சுற்றிப் பார்க் கப் போகிறேன் என்று சொன்னேன்.

யாழ்ப்பாணத்திற்குச் சென்றால் நீங்கள் பூபாலசிங்கம் அவர்களைச் சந்திக்காமல் திரும்பக் கூடாது என்றும் கூறினர்கள்.

பூபாலசிங்கம் - வரலாற்றில் வரும் கதாநாயகர்கள் பெயர்போல் இருக்கிறதே என்று யோசித்தேன்.

திரு பூபாலசிங்கம் அவர்களைப்பற்றிய பெருமையான செய்திகளை என் நண்பர் கூறினர். அவர் ஒரு புத்தக வியாபாரி. தமிழகத்தில் வெளியிடப்படும் நல்ல நூல்களை திரு.பூபாலசிங்கம் யாழ்ப்பாணத்தில்விற் பனை செய்து வருவதாக அறிந்தேன். தமிழ் நாட்டிலிருந்து வெளிவ ரும் பத்திரிகைகளுக்கு நல்லதொரு விற்பனையைத் தேடித்தரும் பத்தி ரிகை விற்பனையாளராகவும் அவர் திகழ்கிறார் என்பதையும் கேட்ட றிந்தேன்.

1945 ஆம் ஆண்டிலிருந்து நூல் விற்பனை, பத்திரிகை விற்பனைப் பணியில் படிப்படியாக முன்னேறிய திரு பூபாலசிங்கம் உழைப்பால் உயர்ந்தவர்.

யாழ்ப்பாணம் சென்றால் திரு பூபாலசிங்கம் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற கட்டாயமும் எனக்கிருந்தது. சிலமாதங்களாக ''அமுதசுரபி''க்கு யாழ்ப்பாணத்தில் விற்பனையாளர்கள் இல்லை. தமி ழின் இதயமாகத் திகழும் யாழ்ப்பாணத்தில் 'அமுதசுரபிக்கு'த் தக்க விற்பனையாளரைத் தேடுவது எனது முக்கியப் பணி. என் பயணத் திட்டத்தில் சந்திக்க வேண்டியவர்கள் பட்டியலில்... அவரது பெயரை முதலிலேயே சேர்த்துக் கொண்டேன்.

---

''கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுல்
கைகொட்டிச் சிரியாரோ — பாரதி

இலங்கைப் பயணம் புறப்படுவதற்கு முதல் நாள் செய்தி ஒன்று கிடைத்தது. எதிர்பாராத செய்தி. திடுக்கிடும் செய்தி. மனவேதனைப் படும் செய்தி.

திரு பூபாலசிங்கம் திடீரென காலமாகிவிட்டார். செய்தியை முதலில் நம்பமுடியவில்லை. பிறகு தக்கவர்களைக் கேட்டறிந்தபோது. செய்தி உண்மையானது என அறிந்தேன். திரு பூபாலசிங்கம் அமரராகிவிட்டார்.

நண்பர்களை ஏராளமாகப் பெற்றிருந்த பூபாலசிங்கம் அவர்களை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றுவிட்டார். அவர் சார்ந்த கட்சிப் பணிகளில் உடன் உழைத்தவர்களைத் தவிப்படையச் செய்து சென்று விட்டார்.

யாழ்ப்பாணம் வந்தடைந்த அன்றே திரு பூபாலசிங்கம் அவர்களுடைய புத்தகவிற்பனைக் கடைக்குச் சென்றேன். பஸ் நிலையத்தில் மிகப் பார்வையான இடத்தில் அவரது விற்பனை நிலையம்... நிலையம் அமைந்திருந்தது. கலவரச் சமயம் அவரது கடைகளும் தாக்குதலுக்கும் எரியூட்டலுக்கும் இலக்காயின. மனம் தளரா பூபாலசிங்கம் மீண்டும் அங்கேயே நிமிர்ந்து நின்று பணியாற்றத் தொடங்கினர்.

விற்பனை நிலையத்தில் அவரது குமாரர்களைச் சந்தித்தேன். தந்தை விட்டுச்சென்ற பணிகள் அனைத்தையும் தொடர்ந்து செய்ய அவர்கள் உறுதிபூண்டிருப்பது அவர்களது தோற்றத்தில், சுறுசுறுப்பில், செய்கையில், பேச்சில் தெரிந்தது.

பலவித நூல்களும் கிடைக்கும் அந்த விற்பனை நிலையத்தில், யாழ்ப்பாண மக்களுக்குத் தமிழகப் பத்திரிகைகளை அளிக்கும் பூபாலசிங்கம் நிலையத்தில் சிறிது நேரம் அமர்ந்திருந்தபோது அமரர் பூபாலசிங்கம் வளர்த்துச் சென்றிருந்த பெரும்பணி புலப்பட்டது.

அமராகி வீட்ட திரு பூபாலசிங்கம் இன்றும் நம்மிடையே வாழ்கிறார் என்ற உணர்வை அங்குள்ள நூல்களும், பத்திரிகைகளும் நமக்கு தெளிவுப் படுத்திக் கொண்டிருக்கின்றன.

வாழ்க அமரர் பூபாலசிங்கம் புகழ்!

விக்கிரமன்
சென்னை.

---

''இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ! — பாரதி

# இணையற்ற சேவையாளர்

வள்ளுவன் வாக்குக்கு அமைவாக தோன்றிய பூபாலா. பொதுப் பணியில் அயராது உழைக்கும் சிங்கமே. கல்லாக் கல்விப் பேரறிஞ. கொள்கை இல்லா மனிதன் நீர் நிலையில் மிதக்கும் சருகு ஒப்பான் என்பதை இளமையிலேயே உணர்ந்தாய். மக்களை எல்லாம் சமமாக மதித்துப் பணியாற்றும் சமதர்மக் கொள்கைப் பணிபூண்டாய். அக் கொள்கையாளர் நாட்டுக்கே (ரகூஷியா) இரு தடவை நேரில் சென்று தரிசித்தும் வந்தாய். தீவுப்பகுதி மோட்டார் வள்ளச் சேவைப் பணி பூண்டாய். நயினதீவு ஸ்ரீ கணேசா சனசமூக நிலையம், கிழக்கில் சூடு வீடு அமைக்கும் திட்டம் இவற்றின் பணியாள. அம்பாளின் அருள் வேண்டி வரும் அடியார்களின் பசிப்பிணி தீர்க்கும் அமுதசுரபி அன்னதான சபையின் செயலாள. யாழ்நகர் சென்றாய். அங்கே அறிஞர்கள், சேவையாளர்கள் அறிவுச்சுடர் கொளுத்தும் பணிக்கு உகந்த போற்ற வாழ்ந்தாய். தொழிலாக தேர்ந்து புத்தகசாலையை நிறுவினாய். பகைவர் பொறாமைக்கு இலக்காகி அது பலதடவை தீக்கு இரையாக்கப்பட்ட போதும் அஞ்சாது, அயராது, நின்றாய் அழிந்தவற்றுக்கான நட்டஈடு ஆக ஒரு தொகை உதவப்படும் என்ற செய்தியும் அறிந்தாய், ஆனால் அதையும் பெறுமுன்னே அமைந்தது போலும் நின் நெஞ்சம். அன்றொருநாள் (21-7-1982) அயர்ந்தனை, மறந்தனை, விண்ணுலகு ஏகினை என்பது கேட்டு மக்கள் நெஞ்சம் துண்ணென்று இடித்தது. இணையற்ற சேவையாளரின் பிரிவால் ஏற்பட்ட துயரத்தை விட்டு அவர் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக.

நின்பணி சிறக்க, நின்புகழ் வளர்க.

அன்புச் சோதரர்

**வே. கந்தையா J. P.**

ஒய்வு பெற்ற ஆசிரியர்

முன்னாள் கிராமசபைத் தலைவர்

நயினதீவு. 3

9-8-32

''முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம் உலகத்திற் கொருபுதுமை'' — பாரதி

# தொண்டனை இழந்து துடிக்கின்றோம்

திரு. பூபாலசிங்கம் அவர்களை R. R. P. என்று எல்லோரும் அன்பாக அழைப்பார்கள். நயினாதீவிலே பிறந்த இவர் இளமை முதல் ஏதோ ஒரு சக்தியினால் உந்தப்பட்டவர்போல எல்லோரையும் தமது ஆகர்ஷணசக்தியால் தம்வசப்படுத்திவிடுவார். புரட்சிகரமான எண்ணங் கொண்டவர். புரட்சி, புரட்சி என்று பேசுகின்ற இக்கால இளைஞர்களைப்போல எதற்கெடுத்தாலும் சண்டப் பிரசண்டமாக நடப்பவர் அல்லர். தக்கது இன்னது தகாதது இன்னது என்பதை அறிந்து, பெரியோரைக் கனம்பண்ணி, ஊரோடு ஒத்துப்போகக்கூடிய வகையில் சமூகச் சூழலுக்கேற்பக் கீழ் மட்டத்தவரோடும் தமது எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டு செயற்பட்டு நல்லனவற்றைச் செய்வதில் முனைந்து நிற்பார். கொள்கையில் உறுதியாக நின்றுகொண்டு சந்தர்ப்ப சூழல்களைத் தக்கவாறு கையாண்டு லாவகமாகப் பணிகளைச் செய்து வெற்றி காண்பார். இளைஞராக இருக்கையிலே என்னோடும் ஏனைய முற்போக்கான நண்பர்களுடனும் சேர்ந்து கிராம அபிவிருத்திப் பல துறைகளிலும் முனைந்து உழைத்து வந்தார். ''மணிபல்லவதேவி பொதுநிலைக் கழகம், நயினாதீவு அபிவிருத்திச் சபை, தீவுப்பகுதி மோட்டார் சேவை, அமுதசுரபி அன்னதான சபை, ஆலயப் பிரவேசம், பலி நிறுத்தம்'' போன்ற பல்வேறு துறைகளிலும் அவர் எம்மோடு தோழ்கொடுத்துச் சேவையாற்றினார்.

இதனால், முன்னாள் யாழ் அரச அதிபர் மா. ஸ்ரீகாந்தா, திருவாளர்கள் D. R. O. சிவஞானம், D. R. O. செல்லத்தம்பு, D. R. O. கந்தையா, இன்னும் பல பொதுநலத் தொடர்பு அதிகாரிகளின் பெருமதிப்பையும் பெற்றார். ஊர்ப்பற்றும், இனப்பற்றும், தேசியப்பற்றும், ஒருங்கிணைந்து அவரிடம் காணப்பட்டன. அவரை மனமார நேசிக்காத ஊரவரே இல்லையெனலாம். யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டிருந்தாலும்—ஊரிலே அவர் பங்குபற்றாத கலைநிகழ்ச்சிகளோ, விழாக்களோ இல்லையெனலாம். அன்றியும் தன்னாலான பொருளுதவியும் நல்கி நல்ல காரியங்களுக்கு எப்போதும் கைகொடுத்து எல்லோரினதும் நம்பிக்கைக்கும், நற்மதிப்பிற்கும் பாத்திரமானவராகத் திகழ்ந்தார்.

அவரது இறுதி யாத்திரையின்போது பங்குபற்றிய மக்கள் வெள்ளமே சான்று பகரும். அவருடைய வாழ்க்கை வரலாறு வளர்ந்துவரும் எமது இளைஞர் சமுதாயத்திற்கும், நயினாதீவை விட்டுக் குடிபெயர்ந்து வெளியிடங்களில் வாழும் ஊரவர்க்கும் ஒரு வழி காட்டியாக அமைய வேண்டும் என நான் விரும்புகின்றேன். அவருடைய ஆன்மசாந்திக்காக எல்லாம் வல்ல எம்பிராட்டி நயினை நாகபூஷணி அம்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்

**கா. க. சிவசிதம்பரம்**
முன்னாள் கிராமாதிகாரி
நயினாதீவு.

# வாருங்கள் முதலில் அதைச் செய்வோம்

நயினாதீவில் சமதர்மத்துக்கு வித்திட்ட பெருமகன். மூடக்கொள்கைகளை உடைத்தெறிய, போதனைகளும் சாதனைகளும் நிகழ்த்திய புரட்சியாளன். சாதிப்பேயை ஓடஓட வெருட்டிய பூசாரி. பொதுநல சேவையே தனது வாழ்க்கை இலட்சியமாகக் கொண்ட தொண்டன். சமூகத்தின் அடித்தளத்திலுள்ளவர்களுடனும் மேல்மட்ட மனிதர்களுடனும் ஒரே சீராகப் பழகிய பண்பாளன். காலம்சென்ற ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களை நினைக்கும்போது எனது உள்ளத்தில் கீறிடும் எண்ணக் கருக்கள் இவைகளே.

ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் ஆரம்பித்து வைக்காத எந்தவொரு ஸ்தாபனமும் நயினாதீவில் இல்லை. அவர் பங்குபற்றாத எந்த வைபவமும் இல்லை. அவர் ஆதரவு அளிக்காத எந்த நல்ல இயக்கமும் இல்லை. பிற்போக்காளருக்கு அவர் ஒரு சிம்ம சொப்பனம். உறவு, பந்தம், பாசம் இவற்றையெல்லாம் தள்ளிவைத்து நீதிக்காகப் போராடியவர் அவர். இளைஞர்களுக்கு ஒரு துருவ நட்சத்திரமாக அவர்கள் நேரிய வழியிற் செல்ல வழிகாட்டியவர். இளைஞர்களுக்கு மாத்திரமல்ல பெரியவர்களுக்கும்தான். ஒருவரது கொள்கைகளைக் கண்டிக்கும்போது, அக்கொள்கை கொண்டவர் மேல் பற்றும் பாசமும் வைத்திருக்கும் உயரிய பண்பாளர் அவர். எதிரி ஒருவர் நல்ல காரியம் ஒன்றைச் செய்யும்போது அதைப் போற்றிப் பாராட்டும் உளப் பண்பைக் கண்டு நான் பூரிப்படைந்த சந்தர்ப்பங்கள் பல. சொந்தக் கோபதாபங்களைப் பொது ஸ்தாபனங்களுக்குள் காவிச் செல்லும் ஈனத்தனம் அவரிடம் எப்பொழுதுமே கிடையாது.

தொண்ணூற்றொன்பது ரூபாயை நூறு ரூபாயாக்கிப் பெட்டியில் பூட்டிவைக்கும் சமதர்மவாதிகளைக் கண்டிருக்கின்றேன். ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் அத்தகையர் அல்லர். தரும வழியில் பொருள் தேடி இவைகள் எல்லாம் ஏழைகளுக்கே உரியது என்று எண்ணி வாழ்ந்தவர். சாதி ஒழிக என்று கூட்டங்களில் சிங்கம்போல் கர்ச்சித்து விட்டுச் சொந்தவீட்டில் சாதிப் பேய்க்குக் கொலுவிட்டு ஊஞ்சல் ஆட்டும் அசிங்கமான அரசியல்வாதிகள் பலரை நான் கண்டிருக்கின்றேன். ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் அத்தகைய வெளிவேஷக்காரர் அல்லர். நல்லதைச் சொல்வார் சொல்வதைச் செய்வார். நேற்று ஒரு கட்சி. இன்று இன்னொரு கட்சி. நாளைக்கு எந்தக் கட்சியில் சேரலாம்

---

''முத்தியென்றொரு நிலை சமைத்தாய் - அங்கு
முழுதினையு முணரும் உணர் வமைத்தாய்'' — பாரதி

என்று யோசித்து யோசித்து மண்டையை உடைக்கும் அரசியல்வாதி அல்லர். திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் ஒரு கொள்கைப் பிடிப்பாளர்.

நல்ல நினைவு. நல்ல பேச்சு. நல்ல செயல். இதுவே அவர் பண்பு. தீர்க்காயுசாக வாழவேண்டும் என்று நாம் நினைப்பவர்கள் இடைநடுவில் போய்விடுகிறார்களே — இது ஏன் என்று தெரியவில்லை. அவரது ஆத்மா சாந்தியடைக என்று எல்லோரையும்போல நான் பிரார்த்திக்கப் போவதில்லை. உலகின் எப்பொழுது ''சாந்தியும் சமதர்மமும்'' நிலை பெறுகிறதோ அப்பொழுதுதான் அவரது ஆத்மா சாந்தியடையும். அந்நிலையை உலகம் அடைய நாம் பாடுபடுவோம்!! வாருங்கள் அதை முதலிற் செய்வோம்!! அதுவே அன்னார்க்குநாம் செய்யும் நன்றிக் கடன்.

வி. ஆர். கே. இரத்தினசபாபதி
தலைவர்
நயினாதீவு தெற்கு,
கிராமோதயசபை.

---

''வல்லமை தாராயோ இந்த
மானிலம் பயனுற வாழ்வதற்கே'' — பாரதி

## அன்புத் தோழரே, போய்வாருங்கள்!

வாழ்வுக்கு வழியற்று, வறுமைக்கு விடிவற்று
வாடுபவர் வாழ்வின் இருளகற்ற உழைத்தவரே,
நயினைமண்ணின் பல்துறை வளர்ச்சியிலும்
அக்கறை கொண்டு பெரும்பணி புரிந்தவரே,
அரசியல் அலைகள் மனிதரை இணைப்பதுமுண்டு;
அவையே பின்னர் பிரிப்பதுமுண்டு!
எவரையும் என்றும் பிரிக்காதிணைக்கும்
அன்பின் அலைகள் உருவாகிய பெருங்கடலே,
செங்கொடியின் அரவணைப்பிலே துயிலுங்கள்!
பிற்பகலிலேயே திடீரென மேற்குவானக் கடலுக்குள்
வீழ்ந்துவிட்ட ஆதவனே,
நாளை மீண்டும் கிழக்கு வானத்திலே
உதிக்கின்ற செங்கதிராக மீண்டு வாருங்கள்!
போய் வாருங்கள்!!

தங்கள் தோழமையுள்ள
நா. சிவராசசிங்கம்
(அக்கினிக் குஞ்சு)
பிரதேச சபைத் தலைவர், வேலணை.
Chairman, Pradeshiya Mandalaya,
(Islands South), Velanai.

''ஆனந்த பவனம்''
நயினாதீவு.
6 - 8 - 82.

---

''திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும். — பாரதி

# இறை பணிக்கே எம்மை இட்டுச் சென்றார்.....

## அமரர் ஆர். ஆர். பூபாலசிங்கம் ஜே. பி. அவர்கள்.

''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற நாவுக்கரசரின் திரு வாக்கிற்கு இலக்கணம் படைத்துக் காட்டி அந்த-இலக்கணத்திற்குத் தமது வாழ்க்கையையே இலக்கியமாக அமைத்துக் கொண்டவர்; எமது தலைவர் அமரர் திரு ஆர். ஆர். பூபாலசிங்கம் ஜே. பி. அவர்கள். சிந்திக்கத் தெரிந்த நாள்தொட்டு; அவரது ஆத்மா இறையருளுடன் ஒன்றும் நாள்வரை அன்னாரது எண்ணம், சொல், செயல் யாவும் மக்களுக்காகதான் என்ன செய்யவேண்டும் என்பது பற்றியதாகவே இருந்தது. எனவேதான் அவரது தலைமையில் பல பொதுப்பணி நிறுவனங்கள் உதயமாகின; பல பொதுப்பணித் தொண்டர்களை அவரால் உருவாக்கிவிட முடிந்தது.

நயினைத் தாயின் புனித மண்ணிலே அவதரித்து, தாம்பிறந்த மண்ணிற்கும், ஈழத்திருநாட்டிற்கும் பெருமை தேடித்தந்ததோடு மட்டுமன்றி உலக அரங்கிலும் சைவத்தின் தனிச்சிறப்பையும், தமிழரின் மாண்பினையும் எடுத்துக் காட்டிய பெருமை நயினை மாதாவின் தவப் புதல்வர்கள் பலரை சார்ந்ததாகும். அத்தகைய பெரியார்கள் வரிசையிலே அமரர்களான திரு. க. இராமச்சந்திரா அவர்கள், பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுக்கு அடுத்தபடியாக எமது தலைவர் திரு ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களே வைத்தெண்ணப்பட வேண்டியவர்களாவார்கள்.

அமரர் திரு ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் இளமைப் பருவம் தொட்டுப் பொதுப் பணிகளில் மிகவும் நாட்டம் கொண்டவராக விளங்கினார். பள்ளிப் பராயத்தில் தாம் கற்ற இராமாயணக் கதையும் - அதன் பின்னர் மகாத்மா காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கைகளும் தம்மை வெகுவாகக் கவர்ந்தன என்றும்; அவைகளே தமக்குப் பெதுப்பணி செய்ய செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தை ஊட்டின என்றும் அவர் அடிக்கடி கூறுவார்.

அமரர் இளைஞராய் நயினையில் வாழ்ந்த காலத்தில் பல சனசமூக நிலையங்கள் அவரது முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டன. இன்று பல துறைகளிலும் மக்களுக்கு பணியாற்றிவரும் ஸ்ரீ கணேச சனசமூக நிலையம் அமரர் அவர்களின் பெரு முயற்ச்சியினால் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

---

''தாழ்வு தடுக்குஞ் சதிரே சக்தி
சஞ்சலம் நீக்கும் தவவே சக்தி'' — பாரதி



''மங்கள கும்பம் மணங்கமிழ் இசையில்
இங்கிதம் காணும் எங்களின் பூபால்''



''நீதியை நாட்டும் நீடுயர் பதவியில் (J. P.)
கூடியபோது குதூகலம் காண்க''

அக்காலத்தில் தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துச் சேவையை டாத் திவந்த தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தில் முகா்மை யாளராகப் பணியாற்றி தீவக மக்களின் பிரயாண வசதிகளுக்காகப் பெரும்பணியாற்றினர். இவரது சேவைக்காலத்தில் சங்கத்திற்கு பல புதிய மோட்டார் படகுகள் கொள்வனவு செய்யப்பட்டன. சங்கத் தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டதோடு; பிரயாணிகளின் நலன் கருதி ''நயினதீவு பிரயாணிகள் சங்கம்'' என்ற இயக்கத்தை நிறுவி அதன்மூலம் அரசாங்க அதிகாரிகளுடனும், அரச நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு நயினை மக்களுக்கு பெரும்பணியாற்றினர். நயினு தீவில் ''பஸ்'' சேவை ஆற்றப்பட வேண்டும் என விரும்பி அதில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

அமரர் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் ஒரு பொதுவுடமை வாதி. எல்லோரும் இன்புற்றிருப்பதையே அவர் எப்பொழுதும் விரும் பினர். இளமை தொட்டு அவர் ''கம்யூனிஷ்ட்'' கொள்கையை பின் பற்றி வந்தார். அதே நேரத்தில் அவருள்ளத்தில் ஆழ்ந்த இறை நம் பிக்கையும் குடிகொண்டிருந்தது. இவர் இளைஞராக இருந்த காலத்தில் ஆலயங்களில் பலியிடும் கொடிய வழக்கம் இருந்தது. நயினையில் இவர் வழிபடும் ஓர் சக்தியின் ஆலயத்தில் ஆட்டுக்கடா பலியிடுவதை நிறுத் தும்படி உண்ணுவிரதமும், சத்தியாக்கிரகமும் நடாத்தி வெற்றிகண்ட நிகழ்ச்சி இவரது காந்தியக் கொள்கைக்கும் இறை நம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாகும்.

அன்னை நாகபூஷணியின்பால் ஆராத பக்திகொண்டிருந்த அமரர் அவர்கள்; அம்பிகையின் அருளைப்பெறவரும் அடியவர்களின் பிரயா ணக்கஸ்ரங்கள், மற்றும் வசதியீனங்கள் ஆகியனவற்றை தீர்ப்பதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார். அம்பிகையின் புகழ் திக்கெட் டும் பரவவேண்டும் என்பதற்காக நயினையின் ''தலவரலாற்றினையும் தோத்திரப் பாடல்களையும்'' அச்சிட்டு குறைந்த விலையில் விற்பனை செய்தார். அத்தோடு அம்பிகையின் திருவுருவப் படங்களையும், குறைந்த விலையில் விற்பனை செய்ததன் மூலம் ஈழத்தின் சைவ இல் லங்கள் தோறும் நாகபூஷணி அம்பாளின் திருவருள் பாலிக்கச் செய் தார்.

1960-ம் ஆண்டில் நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்ன தான சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப கர்த்தாக்களில் மிக முக்கியமானவர் அமரர் திரு ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள். அடிய

---

''புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்'' — பாரதி

ஷர்கட்கு அமுது செய்வித்தலாகிய அரும்பணி சிறப்புற நடக்கவேண்டு மெனத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் எவ்வித பிரதி பலனையும் எதிர்பாராமல் அர்ப்பணித்த உத்தமர் அவர். எம்போன்ற இளைஞர்களையும் அப்பணியில் ஈடுபடுத்திய பெருமையும் அவருக்கே உரி யது. அடியவர் பசிப்பிணி அகற்றி அதில் வெற்றி கட்ட அமரர் அவர் கள் அடியவர்களுக்கு தாகசாந்திப்பணி செய்யவேண்டுமென ஆசை கொண்டார்.

முன்னர் அவர் தலைமையில் இயங்கிவந்த நயினாதீவு பிரயாணிகள் சங்கத்தை 1973-ம் ஆண்டில் நயினாதீவு அபிவிருத்திச் சபை என மாற்றி அதற்கெனப் புதிய காரிய நிர்வாகக் குழுவை அமைத்து அதன் தலைமைப் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டு பெரும்பணி யாற்றினார். நயினாதீவு அபிவிருத்திச்சபை அம்பிகையின் உற்சவகா லத்தில் வருகைதரும் அடியவர்களுக்கு தாகசாந்தி செய்தற்பொருட்டு ஆலய முன்றலில் மண்டபம் அமைத்து பகல் இரவாக கோப்பி, தேனீர், குளிர்பானங்கள், குடிநீர் முதலானவற்றை இலவசமாக 1973-ம்ஆண்டு முதல் வருடந்தோறும் மிகவும் சிறப்பானமுறையில் வழங்கி வருகி றது. இவ் அருட்பணியை ஆரம்பித்து வைத்து செவ்வனே நடாத்த ஊக்கமும், ஆக்கமும் தந்த பெருமை அமரர் திரு. ஆர். ஆர். பூபால சிங்கம் அவர்களையே சாரும். அவர் விட்டுச்சென்ற சேவைகளை தொடர்ந் தும் ஆற்றி; அவர் கண்ட இலட்சியக் கனவுகளை நனவாக்கும் வல்ல மையை அவர் வழிநடத்திய தொண்டர்களாகிய எமக்கு அன்னை ''நாகபூஷணி'' அருளவேண்டும்.

இத்தகைய சமூகப் பணிகளையும், தெய்வீகப் பணிகளையும் ஆற்றிய அமரர் திரு ஆர். ஆர். பூபாலசிங்கம் ஓர் கொடைவள்ளல். கல்வி கற் கும் சிறுர்களுக்காக அவர் அள்ளி வழங்கிய நூல்கள் அநேகம். பாட சாலைகளுக்கும், நூல்நிலையங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமது ஸ்தாபனத்திலிருந்து பெறுமதிமிக்க நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்,

பரிசளிப்பு விழாக்களில் கலந்து கொண்டு சிறுர்களை ஊக்குவித்து நூல்களைப் பரிசாக அளிப்பது அவரது கல்விப்பணிக்கோர் எடுத்துக் காட்டாகும்.

''தக்கார் தகவிலரர் என்பவர் தம்
எச்சத்தாற் காணப்படும்'' என்றூர் வள்ளுவர்

---

''சக்தி தனக்கே அடிமையாக்கு — அது
சத்தியத்தின் வெல் கொடியை நாட்டும்'' — பாரதி

அமரர் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களது தகைமை; அவர் விட்டுச்சென்ற பொதுப்பணிகளின் வளர்ச்சியினாலும்; அன்னாரது அன்புக்குழந்தைகளின் சீரிய வாழ்க்கை உயர்ச்சியினாலும் சிறப்புற வேண்டுமென அன்னை "நாகபூஷணியை" இறைஞ்சி நிற்போமாக.

அன்னாரது பேரிழப்பால் ஆற்றொணாத் துயரில் மூழ்கி நிற்கும் அவரது அன்புத் துணைவியார் திருமதி பாக்கியம் அம்மையாருக்கும், அன்புத் தாயாருக்கும், அவர்தம் ம்க்கள் - மருகர்; அன்புச் சகோதரர் சகோதரிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், நயினாதீவு அபிவிருத்திச் சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அமரர் திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம், ஜே. பி. அவர்களின் திவ்விய திருவடிகளில் எமது கண்ணீர் அஞ்சலியையும் சமர்ப்பிக்கிறோம்.

வி. சபாநாதன்
செயலாளர்
நயினாதீவு அபிவிருத்திச் சபை

---

"சக்தி சக்தியென்று சொல்லி — அவள்
சந்நிதியிலே தொழுது நில்லு" — பாரதி

# புத்தக வர்த்தகர் பூபாலசிங்கம்

''சிறுகக் கட்டிப் பெருக வாழ்க'' எனத் தமிழ் பெரியார்கள் வாழ்த்திய வண்ணத்துக்கமைய்வும், ''திரைகடலோடித் திரவியந்தேடு'' என்று நல்லவர்கள் ஊக்குவித்த வண்ணத்துக்கமையவும், எங்கள்மத்தியில் உதாரண புருடராய் வாழ்ந்த இளைஞன் பூபாலசிங்கம்.

திரைகடல் சூழ்ந்த நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர், தமது பன்னிரண்டாண்டுப் பருவத்திலேயே கடல் கடந்து முயற்சியில் துணிகரமாகப் புகுந்தவர். நயினை நாகம்மாளின் கருணையும், நல்லூர்க் கந்தனின் திருவருட் கடாட்சமும் பூபாலசிங்கத்துக்கு ஆக்க பூர்வமாக இருந்தன.

பிராரத்துவ வினையை அவர் அநுபவித்த விதமும், ஆகாமியத்தை அவர் ஈட்டிய வகையும், விளக்கமுடியாதவை. மண்ணாங்கட்டி ஒன்று மேலிடத்திலிருந்து விழுந்தால் தூளாக உடைந்து பண்ணோடு மண்ணாய் நிலத்தை வறுகிப்பிடித்துக் கிடக்கும். ஒரு பந்து மேலிருந்து விழுந்தால் மறுகலித்து உடனடியாக மேலே எழும்பும், மறுமலர்ச்சி அடையும். எரியுண்டவர், வெட்டுண்டவர், வீரராயிருந்தால், ''ஐயோ இதைப் பார், அதைப்பார்'' என்று தானும் அழுது பிறரையும் அழப்பண்ணுவதற்கு ஒப்பாரி சொல்லமாட்டார். பூபாலசிங்கம் தந்தையார் வழியால் தலைசிறந்த சைவ சித்தாந்தி. அவர் ஊழின் வலிமையை உணர்ந்து புன்முறுவல் பூத்தவர். வாழ்வும் தாழ்வும் பகலும் இரவும் எனக் கண்டவர், வாழ்ந்தவர். ''யாவர்க்குமாம்'' எனத் தொடங்கும் திருமூலர் திருமந்திரம் வெறும் சைவசித்தாந்தத் திறன் மாத்திரமல்ல. அது தலைசிறந்த சர்வோதயம். சர்வோதயத்தில் புஸ்பித்த பொதுவுடைமை கண்டவர் பூபாலசிங்கம்.

பூபாலசிங்கம் ஒருமுறையல்ல இருமுறையல்ல, ஒரு இடத்திலல்ல இரு இடங்களிலல்ல, பலமுறை பலவிடங்களில் படாதன பட்டுத் தளிர்த்தவர். தலைதூக்கியவர், தலைவர். பூபாலசிங்கம் தன்னைப் பின்னின்று ஊக்கமளித்து வாழவைத்த அன்னை நாகேஸ்வரியின் திருப்பணிகளில் வெகுவாக ஈடுபட்டு, அவள் மகிமை கூறும் பெருநூல் ஒன்றைத்தக்க புலவரைக்கொண்டு உருவாக்கி வெளியிட்டவர்.

அண்மையில் இதுவரை ஆரும் பெருத ஊக்கம் ஒன்று உண்டாகப்பெற்றுத் திருமுறைத்திரட்டு ஒன்றைத் திரட்டி உருவாக்கி அழகிய படங்களுடன் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு முழுவேலையும் செய்து முடித்து நூல் வெளியிடும் நாள் ஒன்றை நிர்ணயிக்க முயன்ற வேளையில் அவரின் பிராரத்த நாள் முடிந்தது.

சிறுகக் கட்டிப் பெருக வாழ்ந்த பூபாலசிங்கம் அவர்களுக்குப் புத்திர சந்தானமும் புத்தக சந்தானமும் புகழ்பாடும் எச்சங்களாய் உள்ளன. எல்லார்க்கும் இனிய பூபால் இறைவனடி நிழலில் இன்பம் துய்ப்பாராக.

கந்தர்மடம். க. சி. குலரத்தினம்

# THE REX TRADING CO.

**MADRAS.**

Dear Sirs,

We are shocked and grieved to hear suddenly the very sad news of Mr. Poopalasingham's death.

This news really rocked us much, as he was in our midst a few weeks back, and we had an opportunity to have discussion with Mr. Poopalasingham on business matters to our mutual benefit.

The fate has been so cruel to separate him from us permanently, and we can hardly get out of this Grief since our two firms closely connected in matters of business, and most cordial relationship prevailed between our two houses.

we firmly believe that cordiality and business relationship will be strengthened further, and the departed soul will guide us both to achieve this goal.

Our sister concerns and our staff join with us to express their condolences to you at this time of your bereavement.

May the departed soul rest in peace.

Yours faithfully,

THE REX TRADING COMPANY

## SAGHAI Exporters
MADRAS.

Dear Sirs,

Thank you for your letter dated 27th July 82. We assure you that the usual cordial relationship will be maintained by us that was prevailing during the time of Mr. Poopalasingam.

Thanking you, we remain,

Yours faithfully,
FOR SAGHAI EXPORTERS.
A. R. PINHEIRO
Manager.

---

## Manimekalai Prasuram
MADRAS.

Dear Sirs,

We are shocked to hear the sudden demise of Sri R. R. Poobalasingham who was a good friend of us.

Kindly accept and convey our heart felt con dolences to the members of his family.

We assure you our Co-operation always.

Yours sincerely
R. M. RAVI
Partner

# எங்கள் அஞ்சலி

1960-ம் ஆண்டளவில் யாழ்-இளம் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக யான் இருந்தபொழுது - ''கலைமதி'' வெளியீடான ''மேற்கோளாயிரம்'' தொகுப்பு நூல் வெளிவந்த போதுதான் எனக்குப் புத்தகக்கடை பூபாலசிங்கத்தை அறிய முடிந்தது. அவருடைய தோழமைப் பழக்கம், அன்பு, நட்புரிமை அவருடன் நெருங்கி உறவாட வைத்தது. அந்த நெருக்கம் எங்கள் ஊரான மாங்குளத்தில் ஆறுமாத காலம் எங்கள் வீட்டில் தங்கி கூட்டுறவுப் பண்ணையை அவர் நிர்வகித்தபொழுது இன்னும் நெருங்கியது. அந்த நாள் நினைவை என்றும் மறக்கமுடியாது.

வெள்ளை வேஷ்டி, அதற்கேற்ற பால் வெள்ளை நாஷனல் ''சேட்'' நாரீயில் இறுக்கிக் கட்டிய சிகப்புநிற ''மவ்ளர்'' நெற்றியில் ஒரு சந்தனப் பொட்டு, கறுப்புநிற உடம்பில் வெண்ணிறப் பற்கள் தெரியச் சிரிக்கும் அழகு, நிமிர்ந்த நடை, யாருடனும் அன்பாகப், பண்பாக, நகைச்சுவை ததும்ப பழகும் பாங்கு நினைவை விட்டு நீங்காத உருவம், இனி யாம் நேரில் காணவா போகின்றோம். கம்யூனிட் கட்சி இருக்கும்வரை அவர் நாமம் இருந்துகொண்டே இருக்கும்.

பொருட்செல்வம், அருட்செல்வம், மழலைச் செல்வம் ஆகிய எல்லாச் செல்வங்களையும் சிறப்புற அனுபவித்துப் பெருவாழ்வு கண்ட அமரர் நாம் யாருமே எதிர்பாராத அளவு விரைவாகப் போய்விட்டதை எண்ணும் பொழுதுதான் நெஞ்சம் ஏங்குகின்றது; எங்கள் அஞ்சலி அவருக்கு என்றும் உண்டு

டாக்டர் ஏ. எஸ். மகாலிங்கம்
அரவிந்தன் கிளினிக்
மாங்குளம்.

# அனுதாபச் செய்தி

அமரர் பூபாலசிங்கத்தின் திடீர் மறைவு இலகுவில் ஈடுசெய்ய முடியாததொன்றாகும். முற்போக்காளராய் இருந்த அவர் தனது தொழில் மூலமாகவும் பல்வேறு பொதுப்பணிகள் வாயிலாகவும் நமது சமுதாயத்துக்கு அருந்தொண்டாற்றியவர். இக்காலத்திலே அறிவுப் பசிக்கு உணவு அளிப்பதும் அவசியமான சமூக சேவையாகும். அதன் முக்கியத்துவத்தை முற்றும் உணர்ந்து செயற்பட்டவர் பூபால சிங்கம். நூல் விற்பனையை வியாபாரமாக மாத்திரம் கருதாது, பய னுள்ள நூல்களையும் சஞ்சிகைகளையும் இளைய தலைமுறையினருக்கு எளிதாகக் கிடைக்கும்படி செய்தல் வேண்டும் என்ற இலட்சிய நோக் குடன் செயற்பட்டார்.

தன்னளவில் ஒரு அரசியல் இயக்கத்துக்கு விசுவாசியாக இருந்த அதேவேளையில், அறிவு விருத்தியிலும் மனித உறவுகளிலும் குறுகிய வரம்புகளைக் கடந்து அனைவருடன் இங்கிதமாகப் பழகும் இனிய சுபா வம் படைத்தவராயிருந்தார். வாழும் இலக்கியம் போல மனிதநேயம் தழுவிய மாட்சி அவரிடம் இருந்தது.

இலக்கிய ஆசிரியன் என்ற வகையில் பூபாலசிங்கம் அவர்களுடன் பலகாலமாய்ப் பழகியிருக்கிறேன். இலங்கையிலும் அச்சுத்தொழிலையும் வெளியீட்டு வசதிகளையும் பரவலாக்கி நல்ல - முற்போக்கான - நூல்களை வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று திட் டமிட்டுக் கொண்டிருந்தார். அதற்கான ஆரம்பப் பணிகளையும் செய் திருந்தார். அதற்குள் எதிர்பாராத வகையில் மறைந்துவிட்டார். அவ ரது அபிலாஷைகளை முன்னெடுத்துச் செல்வதே நாம் ஆற்றக்கூடிய நன்றிக் கடனாகும்.

பேராசிரியர் க. கைலாசபதி

கலைப்பீடம்,
யாழ் திருநெல்வேலி வளாகம்
யாழ்ப்பாணம்.
16-8-82

---

''மனதில் உறுதிவேண்டும் வாகினிலே இனிமை வேண்டும்'' — பாரதி



"சோவியத் தொன்றியம் சென்று மீண்டு
தாயகம் நபினையில் சாற்றும் பேருரை"

# ஸ்ரீமகள் கம்பனி

சென்னை,

அன்புடையீர், வணக்கம்.

தங்களது அன்புத் தந்தையார் திடீரென மறைந்த செய்தி கேட்டு மிகவும் கவலை கொள்ளுகிறோம். தாங்களும் தங்கள் தந்தையாரும் சமீபத்தில் எங்கள் கம்பெனிக்கு வந்திருந்தது இன்னும் எங்கள் கண் முன்னே நிற்கிறது. அப்படி இருக்க பெரியவர் மறைந்துவிட்டாரென்று அறிந்து மிகவும் வருத்தமடைகிறோம். தங்களது துயரத்தில் நாங்களும் பங்குகொள்ளுகிறோம். தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மனக்கவலைகளை மறந்து தங்களது தந்தையார் விட்டுச்சென்ற வியாபாரத்தை நல்ல முறையில் நடத்த எல்லா மன உறுதியையும் தரவேண்டுமென்று இறைவனை வேண்டுகிறோம்.

இப்படிக்கு
ஸ்ரீமகள் கம்பனி
உரிமையாளர்

---

## அவர் செய்த தொழிலே தொண்டின் தரத்தது

தொண்டர்கள் பலவிதமானவர்கள், தொண்டுகளும் பல விதமானவை. தொண்டர்களின் பெருமை சொல்ல முடியாது. பசிப்பிணி போக்க அன்ன சத்திரம், நீர் விடாய் தீர்க்கத் தண்ணீர்ப் பந்தல், அறிவுப் பசி தீர்க்கப் புத்தக சாலை, அமரர் பூபாலசிங்கம் அவர்கள் பல்வேறிடங்களில் புத்தகசாலைகளும், பத்திரிகையாலயங்களும் நடத்தித் தமது தொழில்மூலம் தொண்டு செய்தவர். அவரை அறிஞர் உலகம் என்றென்றும் நினைவிற் கொண்டிருப்பர். அவர் புகழ் வாழ்க. அவர் ஆன்மா சாந்தியடைக.

இங்ஙனம்
க. கனகராசா ஜே. பி.
மில்க்வைற் தொழிலதிபர்

# அனுதாபச் செய்தி

அமரர் R. R. பூபாலசிங்கம் அவர்களை அறியாதவர் மிகச் சிலர். அத்துணைப் பிரசித்திபெற்று யாழ்ப்பாணத்தில் விளங்கினர். புத்தகங்கள் சஞ்சிகைகள் முதலியவற்றை வெளிநாட்டிலிருந்து தருவித்துப் பொது மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கச் செய்யும் நோக்குடன் இவர் நடத்தி வந்த புத்தக வியாபாரப் பணி அறிஞர்கள் பலர் இவரை நாடிவரும் சூழ்நிலையை உருவாக்கியது.

இவர் சமயத்துறையில் கொண்டுள்ள ஈடுபாடு அசாதாரணமானது. நயினாதீவைத் தம் பிறப்பிடமாகக் கொண்ட பூபாலசிங்கம் அவர்கள் சமீபத்தில் நயினாதீவில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் நாகபூஷணி அம்பிகையின் திருத்தவ வரலாற்று நூல் ஒன்றைத் தகுந்த ஆராய்ச்சியாளரைக் கொண்டு எழுதுவித்துத் தாமே வெளியிட்டார்.

சமயாபிமானிகளும் நூல்களையே சதா நாடிநிற்கும் அறிஞர்களும் இவரது மறைவை நன்குணர்ந்து கவலையுற்று நிற்கின்றனர். நோய் வாய்ப்பட்டு அதன் விளைவாக நெடுங்காலம் படுக்கையிலழுந்தாது, திடீரென, கடமையாற்றிக்கொண்டிருக்கும் பொழுதே மறைந்தமை எல்லோரையும் பெரிதும் கவலைகொள்ள வைத்தது. இறுதிவரை கடமையில் கண்ணுங் கருத்துமாக இருந்து எல்லோருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்நார். இவர் மறைவு பெரும் வேதனையைத் தருகின்றது.

இவர் ஆன்மா சாந்தியடைவதாக.

இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
16-8-1982.

கா. கைலாசநாத குருக்கள்

"பங்கை நடுவினில் அன்புருவான நம்பரமன் வாழ்கின்ருன்'' — பாரதி

# அமரர் பூபாலசிங்கனூர் நினைவாஞ்சலி

**பண்டிதர் ஆசிநாதர்**

### ஆசிரியப்பா

கவலை பெரிதே! கவலை பெரிதே!
கலக்கம் பெரிதே! கலக்கம் பெரிதே!
பூபால சிங்கம் பெருமக னூரின்
பிரிவு பெரிதே! பேரிழப் பாமே!
நாமனை வோரும் நாளுமே அறிந்த
நூலக விற்பனை நிலையகத் ததிபன்
நற்குல நற்குண நாயகச் சீமான்
நயினைப் பதியின் நற்றவக் கோமான்
வல்லபன் நல்லவன் வண்மையின் பண்பினன்
வளமுள வாழ்வினன் வள்ளலா யிருந்து
வான்புக ழுற்று நூல்பல தேர்ந்து
விற்பனை யுலகின் வேந்தனாய் மிளிர்ந்து
விளங்கிய பூபால சிங்கமா மிவரின்
இறப்பினால் இசைந்த இழப்புமே பெரிதே!
கல்வி மாணவர் கற்பிப் போர்கள்
நற்கலை வாணர் நாடறி வர்த்தகர்
அத்தனை பேருயர்க்கும் அறிமு மாகிப்
புத்தகச் சஞ்சிகை வெளியீ டனைத்தும்
தத்துவ நியதியில் தருவித் துதவினன்
விற்பனைச் சிறப்பினால் நற்புகழ் பெற்றோன்
நற்பணி யாவும் நயந்தே புரிந்து
நாட்டுயர் வுக்காய் ஆற்றிய தொண்டின்
நற்பே றாக நல்லர சாங்கமே
சமாதான நீதி வானெனும் பதவிப்
பட்டமே கொடுத்துப் பாராட் டினரே!
சமதர்மக் கொள்கையின் மகத்துவ முணர்ந்து

---

''ஆதிப்பரம் பொருளின் ஊக்கம் — அதை
அன்னை எனப்பணிதல் ஆக்கம்'' — பாரதி

எவர்க்குமே உரியனாய் அன்பனாய் இலக்கினன்
பழகுதற் குகந்த பண்புகள் உள்ளவன்
ஏற்றத் தாழ்வு வேற்றுமை தவிர்த்து
எல்லோ ருக்கும் எல்லா மாக
இலங்கித் துலங்கி ஏற்றமே யுற்றோன்
பூபால சிங்கர் பெருமனை தானே
நூலக மாக இலங்கிய தன்றோ!
மதிப்பும் கதிப்பும் துதிப்பும் சிறப்பும்
மாண்புறப் பெற்று மிளிர்ந்திடுங் காலை
காலன் கையிற் காலமே மாயினன்!
இன்னுன் பெருமையைச் சொல்லவும் போமோ?
அன்னார் துணைவியும் மாண்புகள் பெரிதே
இல்லத் தரசி இலக்கணத் தலைவி
நல்லுப சார நற்குண நாயகி
சுற்றங் காக்குங் சோபித தாயகி
பெற்றோர் போன்றே பேறுகள் பெற்ற
மக்கள்தம் பெருமையும் பேசுதற் கரியதே!
மறைவினால் வதங்கும் மனைமக் களுக்கு
மறைவிலாத் துயரத் தேறுதல் கூறுதும்
பொன்னார் மேனிப் பூபால சிங்கமாம்
அன்னார் ஆன்மா அடைக சாந்தி!
அன்னார் பணிகள் தொடர்ந்து நிலைக்குக!
அன்னார் கொள்கைகள் அகிலமும் பரவுக!
அன்னார் பெருமைகள் நிலைத்து வளருக!
அன்னார் நிறுவனம் ஆலெனச் சிறக்கவே

''நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு''

''ஆசி இல்லம்''
காங்கேசன்துறை.
12-8-82

யோ. ஆசிநாதர்

---

''சக்தி என்னும் இன்பமுள்ள பொய்கை — அதில்
தண்ணமுத மாரிநித்தம் பெய்கை'' — பாரதி

"உருவாக்கிய சேவைகளினால்
அமர வாழ்வு பெற்று ஆத்மா-
சாந்தி அடைவதாக!"

ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் அருளாட்சிமிக்க நயினைத் தீவகத்துப் பிறந்த திருவாளர் இ. இ. பூபாலசிங்கம் ஜே. பி. அவர்கள் "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவே" என்ற இவ்வாக்குக்கமைய பிறந்த ஊருக்கும், சமூகத்திற்கும் ஆற்றிய சேவைகள் அளவிடற் கரியன.

இறப்பின் பின் பிறப்பொன்று இருக்கின்றது என்ற நம்பிக்கை மிக்க சைவ சமயத்தின் தத்துவத்தின்படி முற்பிறப்பில் அவர் செய்த; செய்ய விரும்பிய பணிகளை முற்றுப்பெற வைப்பதற்காகவே இப்பூவுல கில் தோன்றி அந்தப்பணிகளைச் சிறப்புடன் செய்து முடித்து இறைபதம் அடைந்துள்ளார்.

அவருடைய கொள்கைகள் யாவும் சமத்துவம், சமதர்மம் என்ற அடிப்படையில் மானிடப்பிறவியெடுத்த அனைவரும், ஆண் பெண் என்றோ, ஏழை பணக்காரன் என்றோ, உயர்குலத்தோர் தாழ்ந்த குலத் தோர் என்றோ, முதலாளி தொழிலாளி என்றோ இன்னும் பல வர்க்க வேறுபாடுகளைச் சொல்லி ஒருவரை ஒருவர் இழிவுபடுத்தி வாழக் கூடாது என்பதாகும்.

பெரும் பெரும் இலாபமீட்டக்கூடிய செய்தொழில்கள் பல இருந் தும் மக்கள் அனைவரும் பயன்பெற்று அதனால் இம்மை மறுமை இரண் டிற்கும் உறுதுணையாக அமையக்கூடிய கல்விப் பணிக்கே உரியதான உத்தம தொழிலைத் தேர்ந்தெடுத்துத் தொழில் என்ற முறையில் மட்டுமன்றி உயர்ந்த சேவையாகவுமே செய்து மகிழ்ந்தார்.

திருவாளர் இ. இ பூபாலசிங்கம் அவர்கள் உருவாக்கிச் சேவைபுரிந்த பொது நிலையங்கள் பல இருப்பினும் அவற்றில் மிகவும் சிறப்புற்று விளங்குவது "நயினை ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபை" என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நயினையம்பதியிலே அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருட் கடாட்சம்பெற வரும் பல்லாயிரக்கணக்கான அம்பிகையடியார்களுக்கும், யாத்திரிகப் பெருமக்களுக்கும் என்றும் குறைவின்றி அமுதைச் சுரந்து அளிக்கும் "அமுத சுரபி" என்னும் மணிமண்டபத்திலே ஆற்றப்படும் (மகேஸ்வர பூஷை) அன்னதானப் பணியின் பலனால் அன்னாரின் (திருவாளர் இ. இ. பூபாலசிங்கம் அவர்களின்) ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவி ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

க. வே. பரமலிங்கம் (ஜே. பி.)
கௌரவ காரியதரிசி
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

ஐயா,

பெரியார் திரு. பூபாலசிங்கம் அவர்கள் மிக்க தமிழ்ப்பற்று உள்ள வர். சிந்தனையாளர், உழைப்பினால் உயர்ந்தவர், இலட்சிய நோக்கி னர், நேர்மையாளர், இலங்கையில் தமிழ்ப் புத்தக விற்பனைத் துறை யில் வரலாறு படைத்தவர். அறநெறி உணர்வினர். தம்மை அடைந்த தனியார்க்கும் பொது நிலையங்களுக்கும் தாராளமாக உதவியவர். கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடுகளின் விற்பனைக்கு உதவியவர். அவர் இறந்ததற்கு இரண்டொரு வாரங்களின் முன் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்தின் முன் சங்க இலக்கியச் செயலா ளரை கண்டபோது சங்க நூல்களின் விற்பனைக்கு ஆதரவு தருவதா கக் கூறியிருந்தார். சிலநாட்களுக்கு இடையில் அவரின் மறைவுபற்றிப் பத்திரிகையில் பார்த்தபோது அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக இருந்தன. அவரது மறைவு இலங்கைத் தமிழுலகிற்கு நிரப்ப இயலாதது. அவர் மறைவினால் வேதனையுறும் அவரது மனைவி மக்களுக்கும் உறவினர்க ளுக்கும், அவரது தாபனத்திற் கடமையாற்றுநர்களுக்கும் தமிழ்ச் சங் கம் மிக்க ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது. அவரது ஆன்ம நலத்திற்காகத் தமிழ்ச்சங்கம் அஞ்சலி செய்கிறது.

'நெருநல் உளனொருவன் இன்றில்லையென்றும் பெருமை உடைத் திவ் வுலகு' என்பது வள்ளுவனார் வாக்கு. பெரியார் அவர்கள் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

அன்புள்ள

க. இ. க. கந்தசுவாமி
பொதுச் செயலாளர்

---

''கல்வியிலே மதியினைநீ தொடுக்கவேண்டும்
கருணையினால் ஐயங்கள் கெடுக்கவேண்டும்.'' — பாரதி

தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள்
பிரிவாற்றுமை குறித்து சங்கானை சமூகத் தொண்டர்
க. ச. கந்தசாமி அவர்களின்

# கனிவுணர்வுகள்

ஆர்? ஆர்? பூபாலசிங்கமோ? ஆம்; ஆம். பூபாலசிங்கம்தான்; எந்தப் பூபாலசிங்கம் என்ற வினா மீண்டும் எழுந்து வரவில்லை.

தோழர் பூபாலசிங்கம் இறையடி இணைந்த செய்தியை நம்பாமல் என்னிடம் கேட்டார் நண்பர் ஒருவர் ஆர். ஆர். எந்தப் பூபாலசிங்கம் என்று.

புத்தகக்கடைப் பூபாலசிங்கம் என்றால் இலங்கைத் தாயகத்திலும் இந்தியத் தமிழகத்திலும் எத்தனை பிரபலம் பெற்றவராக அவர் வாழ்ந்துயர்ந்தார் என்பதை எழுத்துக்களில் அடக்கிவிட முடியுமா? என்ன?

கட்சிகள் சிலவற்றின் பணிகள் தனி மனித சேவையின் கவர்ச்சிகளிலும் பங்கு பெற்றிருப்பதில் தோழர் பூபாலசிங்கத்தின் கவர்ச்சிப் பணியும் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சிக்கு இருந்து வளர்ந்ததில் வியப் பெதுவுமில்லை. கம்யூனிஸ்ட்டுகளுக்கு இறையுணர்வில்லை என்று சில சருகுகள் சலசலக்கின்ற காலகட்டங்களில்...... தோழர் பூபாலசிங்கம் நயினை நாகபூஷணி அம்பாள் அன்னதான சபை செயலாளராயிருந்து ஆற்றிய பணிகளை அகில இலங்கையிலுள்ள இறை நினைவாளர்கள் நினைவு கூர்ந்து பார்ப்பார்கள் தானே.

## உண்டி கொடுத்தோர்
## உயிர் கொடுத்தோரே

உண்டி கொடுத்து உயிர் புரந்த தோழர் பூபாலசிங்கத்தின் நற் பணித்துறையில் அன்னாரின் இரத்த உறவுகளின் நித்தியநற் பணிகள் இன்றுபோல் என்றும் சிறந்தோங்க இறையுணர்வோடு இறைஞ்சுகின் றோம்.

வணக்கம்!

காந்த கோட்டம்.
சங்கானை.

# நயினைத்தாயின் அருந்தவப் புதல்வன்

## பூபாலசிங்கம்

வட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும், பிரபல வர்த்தக ரும், சமாதான நீதவானும், சமூக சேவையாளருமான திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் 21-07-82 அன்று காலமானது நயினையம்பதிக்கு மட்டுமல்ல, தமிழ் உலகிற்கே ஈடிணையற்ற பெரும் இழப்பாகும். அமு தசுரபியின் ஆரம்பகர்த்தாவாக, கணேசா சனசமூக நிலைய ஆரம்ப கர்த்தாவாக, அபிவிருத்திச் சபையின் தலைவராக, கிராமோதய சபை யின் உறுப்பினராக, ஏழைகளின் தொண்டனாக, சமயத் தொண்டனாக இருந்து, நயினையம்பதிக்கு அவர் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்கா. இவர் தனது புத்தகசாலை மூலமாக வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பல நூல்களைத் தருவித்து வாசகர்களுக்கு நல்ல அறிவினை ஊட்டிய செயல் வீரன்.

தனது வாழ்நாளில் பெரும்பகுதியைப் பொதுத்தொண்டிலேயே செலவிட்ட நயினைத்தாயின் அருந்தவப் புதல்வன் திரு. ஆர், ஆர். பூபாலசிங்கம் அவர்கள், எமது விளையாட்டுக் கழகத்திற்கும் நல்லாத ரவு தந்து, வருடந்தோறும் விளையாட்டு விழாக்களைச் சிறப்பித்து வந் துள்ளார். 1980-ம் ஆண்டு விளையாட்டு விழாவில், வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார். எல்லா வகையி லும் எமது விளையாட்டுக் கழகத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து எம்மை ஊக்குவித்த பெருமகனாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மாளைப் பிரார்த்தித்து, ஆருத்துயரில் கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது விளையாட்டு கழ கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

சாந்தி!

நயினாதீவு விளையாட்டுக் கழகம்,
நா. குமாரசூரியர்
செயலாளர்
(கிராமோதய சபை உறுப்பினர்
நயினாதீவு வடக்கு)

---

''மண்ணி லார்க்குந் துயரின்றிச் செய்வேன்
வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்'' — பாரதி




''அக்கினிச் சுவாலையில் அழிந்து நிமிர்ந்த
புத்தக சாலையின் பொலிவுறு தோற்றம்''

## தோழர் R. R. பூபாலசிங்கம் J. P. அவர்கள் ரஷ்யா சென்று வந்தமையைப் பாராட்டி நயினைப் பொதுமக்கள் அளித்த

# வரவேற்புபசாரப் பத்திரம்

இரு இராமர் செய்ததவப் பேற்றின் நோக்கும்
இரு நாதர் ஈட்டியநல் அறத்தின் வாழ்வும்
பெருமாது நாகர் மகள் பொன்னி நல்லாள்
பூண்டபெரு மனத்திண்மைப் பொலிவும் இந்தத்
திரு நாடு நயினையிற் பிறந்த பேறும்
தேவியுமை நாகம்மை கடைக்கண் நோக்கும்
வருமாறு அழைத்ததுவோ சோவியத்து
வளநாடு வந்தித்த நண்பா வாழி. 1

கடல் நடுவே மணிநாகர் கலங்கொண் டோச்சி(க்)
கண்ட பெரும் வளம் சுரக்க(க்) காலந்தோறும்
திடல் நடுவே நாகம்மை கோயில் கொண்டு
திருவருளும் பிறநலமும் சுரக்க வேண்டி
அடல் ஏறு நிகர் இளைஞர் சான்றோர் தோன்ற
அன்னையருள் சுரந்திட்ட நயினை நாடு
புகழ் ஏடு தாங்கிற்றுப் பூபால் நின்னைப்
புறந் தந்த பெருமையதே பெருமை வாழி. 2

மண்சுரக்கும் பூக்கல்லும் சங்கும் வேப்ப
மர இலையும் மற்றுமுள பொருட்கள் யாவும்
விண் சுரக்கும் பொருளாக விரும்பி அன்பர்
வேண்டுதலும் பணிதலுமாய் விதிர்த்து விம்மி
கண் சுரக்கும் கண்ணீரால் நனைத்துப் போற்றி(க்)
காமுறுதல் காட்சியெனில் இந்த நாட்டின்
பண்சுரக்கும் மனிதர்களைப் பாரே போற்றும்
பான்மையது பெரிதாமோ பூபாபால் வாழி. 3

எது உடமை ஏதுடமை எவர்க்கு மெல்லாம்
இங்குடமை என்றெண்ணி(க்) கொள்கை நாட்டி(ப்)
பொது உடமை ஆக்கி இந்தப் புவிவாழ் வென்றும்
புகழுறவும் மகிழ்வுறவும் புனித சேவை(ப்)
பண்புடமை அஃதொன்றே பணியாய்க் கொண்டு
பாரில் வளர் இயக்கமதைப் பற்றி நின்று
தனியுடமை தகர்த்தெறிய நின்றாய் தோழா
தமிழர் பெரு நெறியுமதே கண்டாய் வாழி. 4

சோவியத்து நாட்டினிலே மக்கள் வாழ்வு
சுவர்கமெனப் புகழ் பாடிச் சொன்னாய் தோழா
மேவியொத்து மக்களினம் மிளிரும் போது
மேன்மையுறும் புவி வாழ்வு மேலும் மேலும்
பாவிகளா(ப்) பிறர் நலியப் பார்த்து வாழும்
பான்மையது மண்மீது இல்லை யென்றால்
தாவி வரும் மோட்சமது புவிமீ தென்றே
தமிழ் நெஞ்சம் கண்டதடா தமிழா வாழி. 5

பகுத்துண்டு பல்லுயிர்கள் ஓம்பும் வாழ்வும்
பகைமையிலா அமைதிநிறை பரந்த பண்பும்
மிகுந்திங்கு தமிழொடுநம் சைவமோங்க
மிளிர்ந்தது காண் அழிந்தது நம் மடமையாலே
தொகுத்திங்கு தமிழர் அடை கதவு தட்டி(த்)
தோழர் படை வெளிப்பட்டுத் தொண்டு செய்து
புகுத்துங்கால் புத்துணர்வு பொங்கிப் பாயும்
புகழ்ப்பணியைப் பூபால் நீ செய்து வாழி. 6

பல்லினமும் பலநாடும் பாரில் ஒன்றிப்
பான்மையொடு பண் பட்டுப் பகைமை நீங்கி
நல்லினமாய் நட்புரிமை நாளும் காத்து
நாம் பெறுவ தத்தனையும் நாடித் தேடி
எல்லவர்க்கும் தேவைக்காய் இனிது தந்து
இரந்துண்ணல் இல்லையென மார்பு தட்டி
வல்லவராய் மனிதகுலம் மண்ணில் வாழ
வகையுண்டு நெறியுண்டு வளர்ப்போம் வாழி 7

ஆக்கம் — ஷண்
24-12-72

இங்ஙனம்
**நயினைப் பொதுமக்கள்**

---

''ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்
நான் விரும்பிய காளி தருவாள்'' — பாரதி

உ

சிவமயம்

# நயினாதீவு இந்து கலாச்சார மன்றத்தின் இரங்கல் உரை

எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும் சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னாய் நீங்கியொரு வார்த்தையேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீராறெல்லாம் அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சமூக சேவையாளரும், சமாதான நீதிபதியுமாகிய அன்பர் ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களின் திடீர் மறைவு பொதுவாக ஈழத் தமிழருக்கும், சிறப்பாக நயினை வாழ் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்,

மக்கட் சேவையே மகேசன் சேவை - ஜீவ சேவையே சிவபூசை - கல்விப் பணியே கடவுட்பணி ஆகிய உயரிய இலட்சியங்களோடு சமதர்ம மனப்பான்மையுடன் அருட்பணி ஆற்றி அமரரான திரு ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களின் திடீர் மரணம் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டது.

'மெய்ப் பொருள் காண்பது அறிவு' என்ற இலட்சிய புருஷராக; ''ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி'' என்ற வேத விழுமியத்தில் நம்பிக்கை கொண்டவராக; எல்லாவற்றிலும் இறைவனைக் காணும் வேத வேதாந்தியாக, சோசலிச வாதியாக விளங்கிய திரு பூபாலசிங்கம் அமரரான செய்தி தாங்கொணா அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொதுவுடமைப் பண்பாளராக விளங்கி - முழுநிறைவான மனிதராய் வாழ்ந்து - அமரபதம் எய்திவிட்ட ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களின் ஆத்மா அமைதிபெற்றுச் சாந்தி அடைய வேண்டுமென நயினை நாகபூஷணியம்மையை வேண்டுகின்றோம்.

சாந்தியே பெறுக ஆத்மா
சாந்தியே பெறுக நெஞ்சம்
சாந்தியே பெறுக லோகம்
சாந்தியே தருக நாகபூஷணியம்மை.

இந்து கலாச்சார மன்றம்
நயினாதீவு.

மறைந்த தினத்தன்று வெளியிடப்பட்ட பிரசுரம்

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின்
## யாழ் மாவட்டக் கிளையை ஆரம்பித்த முக்கியஸ்தர்
அமரர் தோழர்
## ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களுக்கு
# கண்ணீர் அஞ்சலி

அமரர் தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் தமது இளமைப் பருவத்திலிருந்தே அதாவது 1937-ம் ஆண்டு தொடக்கம் இடதுசாரி இயக்கத்தில் சேர்ந்து தனது பங்களிப்பைச் செய்து வந்திருக்கிறார்.

இலங்கையின் முதலாவது இடதுசாரி இயக்கமான லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்து அதன் பத்திரிகையான ''சமதர்மம்'' என்ற பத்திரிகையை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்த உதவினர்.

பின் 1946-ம் ஆண்டளவில் இலங்கை கம்யூனிஸ் கட்சியின் யாழ் மாவட்டக் கிளையை ஆரம்பித்த தோழர்களில் இவர் ஒரு முன்னோடியாவார். இவர் யாழ் மாவட்டத் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப் பட்டு கட்சியின் வளர்ச்சிக்கு ஊக்கமுடன் செயல்பட்டார். அத்துடன் யாழ் மாவட்டக் கமிட்டியிலும் நீண்டகாலம் அங்கம் வகித்து பல போராட்டங்களில் ஈடுபட்டார்.

சோவியத்யூனியன் போன்ற சோஸலிஸ நாடுகளுக்கும் சென்று பல திட்டங்களை அறிந்து வந்திருந்தார்.

இவர் இளம் பராயத்தில் சட்டத்தை மீறி சுவரொட்டிகள் ஒட்டி ஏனைய கட்சித் தோழர்களுடன் ஒருவாரம் தடுப்புக்காவலிலும் வைக்கப் பட்டார்.

தனது வாழ்நாள் முழுவதும் ஒரே இலட்சியத்தின்பால் ஈடுபாடு கொண்டு ஒரு சோசலிஸ சமூக அமைப்பிற்காகத் தம்மை அர்ப்பணித்த எம் அருமைத் தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களுக்கு எம் செங்கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றோம்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ் மாவட்டக் குழு,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் சம்மேளனம்,
இலங்கை தேசிய மாதர் முன்னனி,
லங்கா தொழிற்சங்க சம்மேளனம்.

---

''எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனினும் வெற்றி''
— பாரதி

மறைந்த தினத்தன்று வெளியிடப்பட்ட பிரசுரம்

## தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம் J. P. அவர்களின் மறைவு குறித்த

# இரங்கலுரை

சமய, சமூகத் தொண்டனுகிய திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்கள் 21-07-82 அன்று காலமானது தமிழ் உலகிற்கு ஈடிணையற்ற இழப்பாகும். நயினை மணிபல்லவ கலா மன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலந் தொட்டு மன்றத்தின் வளர்ச்சிக்கு தன்னுலியன்ற சேவைகள் புரிந்த இவர் பல சமய நிறுவனங்கள் தொண்டர் ஸ்தாபனங்களின் முக்கிய உறுப்பினருமாவார்.

யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளரும், நயினு தீவு அமுதசுரபி அன்னதானசபைஆரம்பகர்த்தாக்களுள் ஒருவரும், நயினு தீவு அபிவிருத்திச் சபைத் தலைவரும், வடமாநில கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பகால உறுப்பினரும், ஏழைகளின் தோழனுமாகிய அன்னுர் ஆற்றிய சேவைகள் அளவிடற்சரியன, நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் படி கேட்கும் போதெல்லாம் மனங்கோணுது பங்குகொள்ளும் அன்பன், பொருளுதவி புரிவதிலும் பின் நிற்பதில்லை.

வாழ்நாளில் பெரும் பகுதியைச் சமூக சேவையிலேயே செலவிட்ட இவர் தனக்கென வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்தார். இந்தியாவில் இருந்து ஏராளமான நூல்களை இறக்குமதி செய்து வாசகர்கள் மத்தியில் தனக்கென ஒரு இடத்தையும் பெற்றுவிட்டார்.

16-4-82 அன்று நடைபெற்ற எமது கலாமன்ற 20-வது ஆண்டு நிறைவு விழாவிலும் கூட பங்குகொண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பித்த பெரியவர். என்றும் எமக்குத் தோன்ருத் துணையாக உதவி வந்தார்.

பாரதி நாற்றுண்டு கொண்டாடப்படும் இக்காலகட்டத்தில் நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் கொண்ட இலட்சிய வீரனை இழந்து நிற்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது மன்றத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

22-7-82 நயினை மணிபல்லவ கலா மன்றம்

மறைந்த தினத்தன்று வெளியிடப்பட்ட பிரசுரம்

## பொதுச் சேவையையே உள்ளம் நிறைந்த உத்தமத் தொண்டன் திரு. இ. இ. பூபாலசிங்கம் ஜே. பி. அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

ஈழம் வாழ் மக்களினதும் குறிப்பாக நயினை மக்களினதும் முன்னேற்றத்திற்காகவும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளிடம் அருள் பெறச் செல்லும் பக்தர்கள் அடியார்களின் பலவித கஷ்டங்களைப் போக்கவும் அல்லும் பகலும் அயராதுழைத்து, உலகின் கண்ணே புகழ் பரப்பிக்கொண்டிருக்கும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்ன தான சபையை நிறுவிய ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகவும், இணைக்காரியதரிசிகளில் ஒருவராகவும் இருந்து அரும் பெரும் சேவை செய்த தொண்டன் திரு. இ. இ. பூபாலசிங்கம் ஜே. பி. அவர்கள் நம் மத்தியிலிருந்து பிரிந்து இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அஞ்சலி செலுத்தி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,

நயினாதீவு. நயினாதீவு நாகபூஷணி
22-07-82 அமுதசுரபி அன்னதான சபை

''மங்கள வாக்கு நித்யானந்த ஊற்று'' — பாரதி

உ

# இரங்கல்

## நயினை நாயகி! நீ தந்த ''பூபாலசிங்கம்'' எங்கே?

### அகவல்

அம்பிகை தயாபரி நயினை நாயகி
நம்பினோர்க் குதவும் நாகபூ ஷணிநீ
அம்புவி புகழ்ந்து போற்றிடும் புதல்வனாய்
செம்மல் பூபால சிங்கனைத் தந்தனை
பெற்றனை அவனுல் அமுத சுரபியாம்
உற்றிடும் அடியருக் கமுதளி சபையே
கற்றவர் பலபேர் கனமுற இருந்தும்
நற்றவ னாகவே விளங்கிடும் அவனே
அடியருள் அருள்பெற வருப்பவர் இடருற
படகுச் சேவையைத் தொடக்கிட வைத்தாய்
நீயுறு நயினை நயமுறு மக்கள்
பாயுறு படகில் அலையா தழகுறப்
போய்வரப் பணிபுரி துய்கமும் அவனே
நாயக னாய்நின் ருக்கிட வைத்தாய்
ஐம்மூன் ருண்டுறு பொழுதே யவனை
கைம்மாறு கருதாத் தொண்ட னாக்கியே
அரசியல் வாழ்விலும் இனிவுறப் புகுத்தி
பரந்திடு தொழிலார் வர்க்கம் போற்றிட
திறம்படப் பணிசெய் தீரனாய் ஆக்கினை
சிறுகடை தொடங்கி ஒருகடை யாக்கி
இருகடை முக்கடை நாற்கடை கொண்டு
பொருளுறு நூல்கள் பொதுலரிய நிலையம்
பொருளுறு ஒங்கிய முதலாளி ஆக்கினை
முதலாளி ஆயினுந் தொழிலாளி யாகவே
பதருது பணிசெய் தொழிலாளி துணைவனாய்
இலங்கைத் தொழிலாள் சம்மே ளனத்தின்
வலல்சொான் துணையாம் தலைவனாய் ஆக்கினை
சோவியத் அரசும் போற்றியே அழைத்து
மேவிய புகழெலாஞ் சூட்டிடச் செய்தனை

---

''ஒன்றே நின்றினி வென்ருயினுமுயிர்
சென்ருயினும் வரி குன்ருதோதுவம்'' — பாரதி

இலங்கை யரசும் போற்றியே யவன்பணி
இலங்குறு சமஞ்செய் நீதவா ளுக்கியே
துலங்கிடச் செய்தனே தூயையே நீயே
இராமன் பணிந்த ராமேஸ் வரத்தலம்
பராபரிப் பாளருள் ஒருவனு யாக்கினே
இத்தகைச் சீருஞ் சிறப்புங் கொடுத்தநின்
உத்தமப் புதல்வன் வித்தகச் செல்வன்
நத்திஞேர் நலமுற வாழ்வளி செம்மல்
உத்தமர் போற்றும் உயர்குண சீலன்
அன்பே யுருவா யானஎம் பெருமகன்
தன்னே ரில்லாத் தனிப்பெருந் தலைவனை
மனைவியும் மக்களும் அலம்பிப் புலம்பிட
இணையில் சுற்றம் சூழ்ந்து கதறிட
துணைவர் கண்ணீர் ஆருய் வடித்திட
தோழரா யுற்ற தொழிலாள ரெல்லாம்
ஆழவே ஆருத் துயரது கொண்டு
எங்கே எங்கே எம்முறு கற்பகம்
எங்கே எங்கே எம்முறு துணையென்
அங்கும் இங்கும் அரண்டு புரண்டிட
மறைத்தனே மறைத்தனே அவனை
இறைத்துணை இதுவோ இறைவி! இறைவி.

திரு. த. கந்தசாமி
(இளைப்பாறிய அதிபர்)

''ஓயுதல் செய்யோம்தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்'' — பாரதி

# துயரம் போமோ

தொழிலாள வர்க்கத் தாரின்
தோழனே தூய்மை யோடு
எழிலார்ந்த பொதுவு டைமை
இயக்கத்தை வளர்த்த நண்பா
தெளிவுள்ள சிந்தை யோடு
செயற்பட்ட இனிய தோழா
இளமையில் எம்மை விட்டு
ஏகினை பொறுக்க லாமோ?

அன்பினுல் பலரை வென்ருய்
அறிவினுல் நிலைத்து நின்ருய்
பண்பினுல் மனித ஞனை
பணிவினுல் டோற்றப் பட்டாய்
நண்பரால் நாடப் பெற்ருய்
நல்லவர் மதிக்கப் பெற்ருய்
அன்பனே பூபால சிங்க
அமரனே! எங்குற்ருய் நீ

ஆற்றலால் வளர்ந்து மேலோர்
அனுதினம் புகழும் வண்ணம்
போற்றிடும் நூல்கள் தாங்கும்
புத்தக நிலையம் வைத்தே
சாற்றிடும் யணிகள் செய்த
தன்னல மற்ற நண்பா
ஈற்றினில் நாங்கள் வாட
எங்குற்ருய் துயரம் போமோ.

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை

---

''காவியம் செய்வோம் நல்ல காடுவளர்ப் போம்
கலைவளர்ப்போம் கொல்லர் உலைவளர்ப்போம் — பாரதி

# இரங்கல்

மணித்தீவின் மண்முளைத்த தவத்தின் வித்தாய்
மலர்ந் தெழுந்து நாகம்மை அருளாமூற்றில்
தனித்துவாய் இருஇராமர் தகமை ஓங்க(த்)
தாய்பொன்னி புறந்தந்து தமிழால் வாழ்த்த
டனித்தசடைக் குருநாதர் முத்துச்சாமி
பாங்குடனே ஆசிபல கூறியேத்த
இனித்தமுடைப் பூபால சிங்கமாக
ஏற்றமுற்ருய் ஏந்தலே நீ எங்கே சென்ருய்.

திருவதனப் பெரும் பொலிவில் தேசுதோன்றும்
திகழ் அழகுக் கருவிழியில் கருணை நோன்றும்
அருள்நயினை அம்பிகையிற் பற்றுத் தோன்றும்
அகம் கமழும் அறநெஞ்சில் கா
பெருவைரத் தோள்களிலே ஆற்றல் தோன்றும்
பீடுநடைப் பாவனையிற் சால்பு தோன்றும்
உருவநிலை ஆளுமையில் உயர்ந்து தோன்றும்
உத்தமனே உன்பிரிவால் உலர்ந்தோம் ஐயா

ஊழியராய் உன்பணியில் உழைத்தோர் தம்மை
உன்அன்புத் தோழர்களாய் நடத்தி மேலும்
வாழியநீர் என்றவரை நாளும் வாழ்த்தி
வகைசெய்து உரைசெய்து வளர்த்தாய் அன்பா
ஆழியது வற்றிடினும் உன் அன்பு நீரோ
அதுவற்ரு தென்றிருந்த அவர்க்கு இன்று
நாழியொரு கணமேனும் விடை சொல்லாது
நடந்தாயே கடந்தாயே விரைவாய் வாராய்

கால்மாக்ஸின் தத்துவத்தில் காலையூன்றிக்
கண்ணியமாய்(க்) கொள்கைவழி தடவிவாழ்ந்து
மேல்நோக்கில் மக்களின பேதமின்றி
மெச்சஉயர் சோவியத்து நாடு சென்ருய்

---

''இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி இனி மண்ணினில் துஞ்சோம்'' — பாரதி

பார்நோக்கும் பாரதமும் சென்று மீண்டு
பரனடிக்கே உனையாக்கிக் கொண்டாய் அன்பா
யார்நோக்கும் உன்னையொரு தொண்டனாக
யாத்ததுவே இனியாரைக் காண்போம் நண்பா?

நீர்தொட்ட நற்பணிகள் நிலத்தில் நின்று
நின்பணியை நிலைநாட்டல் உறுதியாச்சு
சீர்பெற்று உன்மக்கள் தொடரத் தொண்டு
சிறப்பிக்க அவர்உறுதி பூண்டார் இன்று
‘‘யார் உற்றார், யார் அயலார்’’ என்ற வாக்கு
யாப்பாக(ப்) பொதுப்பணியில் நின்றாய் நன்று
ஊர்(ப்)பற்று உடையோனே நயினை அன்னை
உள்ளொளியில் உன் ஆன்மா சாந்தியாக.

இங்ஙனம்
நயினாதீவு முன்னேற்றக் கழகம்

---

‘‘தீஞ் சொற்கவிதையஞ் சோலை — தனில்
தெய்வீக நன்மணம் வீசும்’’ — பாரதி

# கண்ணீர் அஞ்சலி

அன்பு குழைத்து ஆர்வமுடன் எங்களுக்குத்
தென்பு ஊட்டித் தித்திக்கும் சொல்அமுதப்
பண்பு திரட்டிப் பக்குவமாய் நின்குடும்ப
இன்ப துன்பத்தில் எமை ஈர்த்து நின்றனையே!
சிங்க நிகர்த்த திகழ்மேனி யானாலும்
எங்கள் குழந்தைகளை இதமாக அரவணைத்து
பொங்கும் உவகையுடன் பூரிப்பில் அவர் மகிழ
மங்களமாய் பேத்திகள் போல் மார்போடு அணைத்தாயே!
தங்க மனது தளதளக்கச் சிரிப்பூட்டி
இங்கிதங்கள் காட்டி இல்லத்தில் நின்மக்கள்
பெருமையுடன் எம்மோடு பெரும் பற்றாய் வாழ்ந்திருக்க
அருமருந்தாய், குலவிளக்காய், அகல்விளக்காய் அமைந்தாயே!
உரிமையுடன் நின்மனையாள் உபசரிக்க விருந்தோம்பி
கரிசனையாய் எல்லோர்க்கும் கருணைமழை பொழிந்தாயே!
சதிபதியாய் வாழ்ந்து சந்தோஷ வாழ்க்கையிலே
விதிசதியாய் வந்த வேதனையை என் சொல்வோம்
அதிபதியாய் எல்லோர்க்கும் அன்பாய்நீ பணிசெய்ய
கதிஇதுவாய் வந்த பெரும் காலத்தின்கோல மென்ன?
நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை இருந்தாலும் - நின்பிரிவை நின்குடும்பம்
ஒருபோதும் தாங்காதே உத்தமனே! உன்ஆன்மா
தருமதேவதையின் தாள் சேர்ந்து வாழியவே.

திரு. திருமதி சண்முகராசா தம்பதிகள்

---

''கஞ்சிகுடிப்பதற் கிலார் — அதன்
காரணங்கள் இவை யென்னும் அறிவுமிலார் — பாரதி

மறைந்த தினத்தன்று வெளியிடப்பட்ட பிரசுரம்

# மணித்தீவின்
# ஒளித்தீபம் அணைந்தது!

### திரு. இ. இ. பூபாலசிங்கம் அவர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி

### மாட்சி நயப்புப் பாடல்கள்:

ஏழைத் தொழிலாளிக் கென்றும் துணைநின்று
வாழும் தமிழின் வளம் பெருக்கி - ஊழியங்கள்
செய்யப் பிறந்த திரு. பூபாலசிங்கப் பேர்
ஐயாவே எங்குற்றுய் செப்பு.

செந்தமிழின் செல்வன் சிறந்து வளர்ந்துவரு
சிந்தைமகிழ் பன்னூல்கள் தந்தளித்து — முந்துபுகழ்
பூண்ட திரு. பூபாலப் பேரோறேநீ பிரிந்தால்
ஈண்டெமக்கு யாரோ துணை.

எவ்வேடு தேடி என்னாட்டில் எப்பதியில்
எவ்வீடு நோக்கி யீன்றேகினையோ — அவ்வான்
அமிர்தமென அள்ளி எமக்கு
தமிழ் தந்த சான்றேனே சாற்று.

கண்ணுஞ் சடையாமல் கையும் தளராமல்
உண்ணப் பசி எழுவதோராமல் - எண்ணிஎண்ணி
செந்தமிழ் தாய்க்கு நீ செய்த திருத்தொண்டுக்(கு)
இந்த நிலத்துண்டோ இணை.

சித்திரத்தில் பார்ப்போம் சிலைசெய்து கும்பிடுவோம்
புத்தகத்தில் போற்றிப் புகழ்ந்திடுவோம் - இத்தரைக்கு
நயினைத் தாய் அளித்த நல்லினிய சேயே
உனையிழந்தோம் உணர் விழந்தோமே.

சாதிமத பேதம் சற்றேனும் இன்றி நடு
நீதி வழுவா நெறி நின்று — பூதலத்தில்
சத்தியம் காத்த தரும தயாளனை
நித்தியம் நெஞ்சே நினை.

நயினாதீவு ஸ்ரீ கணேச சனசமூக நிலைய
நிர்வாகத்தினர்.

மறைந்த தினத்தன்று வெளியிடப்பட்ட பிரசுரம்

## தேவை அறிந்து சேவை புரிந்து
## மதிப்புக்குரிய
## திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் அண்ணலே
## எம் நிலையம் போஷகராய் ஏற்றுக்கொண்ட இளவலே
## நும் பாத மலருக்கு

# எம் இதய அஞ்சலி

யார் நினைத்தார் ஐயா
யாம் இன்று கலங்கு வோமென்று
வதைபடும் எம் முள்ளம்
வடிக்கின்றது கண்ணீரை
பொன்னுன உள்ளத்துடன்
பொருத்தமான பெயர் பெற்று
பூபாலசிங்க மென மிளிர்ந்த நிவிர்
பூவுலகை விட்டு போனீரோ ஐயா,
நல்லதொரு உள்ளம் கிடைத்த தென
போஷகராய் நாமிருந்த வேளை
காலனவன் கயிற்றுக்கு கட்டுண்டு
போய்விட்டாய் ஏனய்யா'
நெஞ்சினில் வலியென்ருய் - எம்
நெஞ்சிற்கெல்லாம் வலியை தந்துவிட்டு
நெடும் பயணம் போய்விட்டாய்
சமூக சேவையிலே நாணல்போல் நின்ருயே.
நானிலத்தில் செய்வதற்குப் பல பணியுண்டு
என சொல்லிவிட்டு இன்று
நடுவிலே சென்று விட்டாய்
ஐயா, தோழருக்கு தோழராய்
தோளோடு தோள் நின்றீர் - இன்று
தோழர்கள் கலங்கி நிற்க
தொட்டுத் தழுவிய மனையாளும்
செய்வதறியாது திகைத்து நிற்க - நிவிர்
கொஞ்சிக் குலாவி வளர்த்திட்ட - நும்
செல்வங்கள் குளறியள
எங்கய்யா போனீர்
பொறுக்க வில்லை எம் நெஞ்சம்
குமுறுகிறேம், கதறுகிறேம்
எம் கண்கள் சிந்தும் கண்ணீரை
மாலையாக்கி நும்பாதமலர்க்கு
காணிக்கை யாக்குகின்றேம்.

இங்ஙனம்
முத்தமிழ் சனசமூக நிலைய
உறுப்பினர்கள்

முத்தமிழ் சனசமூக நிலையம்,
முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

## சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் நயினாதீவுக்கு அம்பாளைத் தரிசிக்க வந்தபோது அம்பாள் சந்நிதானத்திலிருந்து பாடியவை.

மங்கல மணம்பரவு மலர்தலைக் காலைபோல்
மணமாய விருள்போக்குவாய்
மாசிலாத் தென்றல்போல் வந்தெனது சோர்வினை
மாற்றிமண வீறுதருவாய்
பொங்குதிரை ஆழிபோல் என்னுள்ளம் பூரிக்கப்
போதுவேத முரசொலிப்பாய்
புண்பட்ட நெஞ்சிலே வெண்பட்டு நிலவெனப்
போந்துசாந் தம்மளிப்பாய்
செங்கதிர் ஞாயிறென வேயெனது சித்தமிசை
திவ்வியஞா னம்பொழிகுவாய்
சிங்கமென வீரமும் திருமூலர் யோகமும்
திருக்குறளின் வாழ்வும் அருள்வாய்
துங்கமிகு நயினையில் தங்கியே புவனந்
தனைக் காத்து அருள்அன்னையே
சதாசிவ மனோன்மணி சிதாகாச ஓம்சுத்த
சக்தியே போற்றி போற்றி. 1

உலக நாயகி உத்தமி நாயகி
இலகு சக்தி இறைவி மனோன்மணி
நலிவு தீர்ந்து நலந்தரும் அம்மையே
பொலிவுறச் செய் புதுயுக வாழ்க்கையே. 2

ஏக சக்தி இன்ப வரந்தரும்
யோக சக்தி உயிர்க் குயிராகிய
போக சக்தி புனித பராசக்தி
நாகபூஷணி நாரணி அம்மையே. 3.

தேகச் சட்டை அணிந்திடும் சீவனின்
சோக நாடகந் தீர்த்து சுகோதய
யோக சித்தி யுடன்பெறச் செய்தருள்
நாக பூஷணி நல்ல பரா சக்தி. 4.

வீழ்க தீய வினைக்குலம் யாவையும்
சூழ்க தூய சமரசச் சோதியே
வாழ்க மன்னுயிர் வானருள் பாலிப்பாய்
ஊழ் கடந்தொளிர் ஓம்சுத்த சுத்தியே. 5.

நயினைத் திருநாட்டில் பிறந்தவரும், யாழ் நகர வாசியும், பிரபல புத்தகசாலை உரிமையாளரும், சிறந்த பொதுவுடமை வாதியும், சமூகத் தொண்டருமான

## ஸ்ரீமான் R. R. பூபாலசிங்கம் அவர்களின்

அமரத்துவம் குறித்துப் பாடிய

# ஞாபகார்த்தப் பாமாலை

தோற்றம்: 1922-06-03

மறைவு: 1982-07-21

## திதி நிருணயம்

பூர்வப் பிரதமையில் புன்மைசேர் துந்துபியில்
சேராடி யைந்துபுதன் சென்றடைந்தான் — பார்மீது
போற்றும் பொதுவுடமைப் பூபால சிங்கமறை
சாற்றுமிறை தாளிணையே தான்.

## நாட்டு வளம்

வரகவியாம் நாகமணிப் புலவர் பின்னை
வாய்த்தமுத்துச் சாமிசித்தர் வயங்குஞ் சால்பாற்
சுரர்வணங்கு சமரசவான் ராம சந்தரர்
தொண்டுபுரி வைத்தியரெஞ் சினியர் நெஞ்சு
உரமுடைய கலைவாணர் அரச சேவை
உயர்பதவி யாளருடன் வணிகர் மற்றும்
திரமுடையார் தந்ததிரு நாடு பூபால்
சிங்கமவர் தருநயினைத் தெய்வ நாடே.

## வரலாறு

செகம்புகழுஞ் சேதுபதி மாப்பாண முதலி
சீர்மிகுந்த மரபுவழி திகழுதனுஷ் கோடி
யகங்களிக்க வருராம லிங்கமெனு மறிஞன்
அன்பினிலே வருராமப் பிள்ளையருங் கனவான்
சுகங்காண நாகநா தப்பெரியோ னில்லாள்
சுகுணவதி நாகர்மணி சுடருதரத் தளித்த
இகம்போற்று மெழிலரசி பொன்னம்மா வென்னு
மின்னமுதை மணங்கொண்டு இலங்சியஇல் வாழ்வில்

நாவாணர் தமைவெல்லும் நாயகனாய் மண்ணில்
நல்லதொரு பொதுவுடமை நாட்டுமறி வுடனே
பாவாணர் புகழ்பாடும் பண்போடு கொள்கைப்
பற்றுவிடா வுத்தமனாய்ப் பாரிலுளார் ஏத்தப்
பூபால சிங்கமெனுந் தலைமகனை யளித்துப்
புண்ணியத்தின் பயன்றுய்த்த கண்ணியவான் ராமர்
நாவார அழைத்துமகிழ் நவைதீர்த்த மைந்தன்
நாட்டிவர சேட்டினிலே நடந்ததனிச் சிங்கம்.

## வேறு

இளமையிலே கல்விநல மினிது வேய்ந்து
எவ்வெவருந் தலைவணங்க ஏறுபோல
உளமதிலே உறுதியுடன் உணர்ச்சி கொண்டு
உயர்வாழ்வே நோக்காக வுயிர்த்த பூபால்
வளமுடைய யாழ்நகரில் அறிவுப் பூங்கா
வளர்புத் தகசாலை வகையாய் நாட்டித்
தளர்வற்று வாழ்வினிலே தன்னே ரற்றுச்
சாற்றுமெழில் மதனெனவே தழைக்குங் காலை.

கதிரேசு கணபதிப் பிள்ளை நாமக்
கனதனவான் வாழ்வினுக்குக் காதலூட்ட
விதிசேர்த்த ஆறுமுகம் நாக முத்து
விளங்கிழையா ளுவந்தளித்த வீர நங்கை
மதிபோலு முகத்தழகி மலரின் செல்வி
மாற்றுயர்ந்த பாக்கியமா மங்கை தன்னை
மதிவாய்ந்த பூபால சிங்க மான
மணமகற்குத் திருமணத்தால் வழங்கி னரால்.

## புத்திரர் சிறப்பு

விண்ணடைந்த புவிராச சிங்க மேலோன்
வீடமைப்புத் திணைக்களத்து விளங்குஞ் சீர்த்திக்
கண்ணனைய ஸ்ரீ தரசிங் கனிந்த வுள்ளக்
கட்டழகி பெட்புடைய விமலாதேவி
தண்ணளிசேர் ராசன்பூ பால சிங்கம்
சாற்றுமுயர் பகவான்பின் தன்பேர் கொண்டோன்
விண்ணொளிபோல் விளங்கவரு மைந்தர்ப் பெற்ற
மேதையவன் பூபால சிங்க மின்னும்

''காதிநூறு சொல்லுவாய் போ போ போ
தரும மொன்றி யற்றிலாய் போ போ போ'' — பாரதி

சமதர்மக் கொள்கைதனைத் தரணிக் கீந்த
தந்தையவன் கார்ல்மாக்சின் தனிப்பேர் பூண்டோன்
தமர்பிறரென் றெண்ணாது உதவுஞ் செய்கைத்
தளிர்க்கரத்தாள் கல்யாணி தணியா அன்பு
அமருளத்து மல்லிகையின் முல்லை யென்னு
மருமருந்தா மகளோடு நால்வர் பெண்கள்
சிமமனைய மைந்தர்களு ளொருவர் நீங்கச்
சேர்ந் தெண்மர் மக்களுடன் திகழ்ந்த செல்வன்

## மருகர் சிறப்பு

விளங்குமொரு விமலாவை வதுவை செய்து
விரும்புமொரு இல்லறத்தை விளக்க வந்த
உளஞ்சிறந்த சேகரனு முயர்ந்த நாமன்
ஊக்கமுளான் ஆங்கிலசெந் தமிழும் வல்லோன்
வளஞ்சிறந்த பரந்தனிலே மின்மு காரி
வாகாருங் கெமிக்கல் தொழிற்சாலை யுள்ளந்
துளங்காது மாமனுக்குத் துணையாய் நின்ற
தோன்றலிவன் மருகனெனக் சுடருந் தூயோன்.

## சகோதரர் சகோதரியர் சிறப்பு

அன்புநிறை பொன்னுத் துரையென்னு மண்ணனை
அரியதொரு தங்க ரெத்ன
அக்காளை யவர்பினர் ஆருயிர் துணையான
ஆண்டகை விஜய ரெத்தினம்
இன்பமான மொழிபேசு பூமணித் தங்கையை
ஏந்தலுயர் அப்பாத் துரை
இன்றமிழ் ஆங்கிலம் கைவந்த ஆசிரிய
இன்னுயி ருடன்பி றப்பை

நந்தாது நீருதவு கொழும்புத் திணைக்களம்
நவிலத்தி யட்சகர் பதவியில்
நவையறக் கடனாற்று மும்மொழிக் கணேசனொடு
நாடறுவர் சோதர ரெனச்
சிந்தாரு லந்தீர வாய்த்தவொரு பாக்கியன்
செகம்புகழு மரிய தலைவன்
சீர்கொண்ட பூபால சிங்கமா மிங்கிதன்
திகழ் நயினை தந்த மகனே.

---

''ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா — பாரதி

## மைத்துன மைத்துனியர் சிறப்பு

இனியனிளஞ் சிரிப்பாலே எவ்வெவவரையும் வெல்லு ராம லிங்கக்
கனிமொழியன் பக்கலிருந் தெப்பொழுதும் மைத்துனர்க்காங் கடமை செய்வோண்

நனிசிறந்த மாணிக்க நலமிகுந்தோன் தங்கம்மா நங்கை நல்லாள்
புனிதனடி புகுந்திட்ட கந்தையா பொன்னம்மாப் புனிதை யின்னும்
பிறர்க்கென்றுந் தீங்கெண்ணு வீரவாகு பேசுபூ மணித்துணைவன் பிரியனன்பு

மறப்பரிய கமலாட்சி மானினல்லாள் மதிமுகத்து ராசம்மா மாண்பார் கல்விச்

சிறப்புடைய ஆசிரியை தேனின் சொல்லாள் செப்புமுயர் வடிவாம்பி கையாநேச

முறப்பழகு மைத்துனர்மைத் துனியரால உளமகிழ்ந்து இல்வாழ்வி னுயர்ச்சி கண்டோன்

## பொது

தந்துபெருஞ் சுற்றமெலாம் புகழ்ந்து வாழ்த்த
நட்புடனே வாழ்க்கைநலம் நாளும் மாந்தி
சந்தியிலே புத்தகத்தின் சாலை வைத்துத்
தமிழ் மணக்க ஈழமெலாம் நூல்கள் தந்து
இந்தியத்தாய் பொதுவுடமை ரஷ்சி யாவா
மெழில்நாடு கண்டரச ஏற்ற முற்றுச்
சந்ததமும் சமதர்மம் வளர்த்துக் காத்த
தனித்தலைவன் பூபால சிங்க மின்னும்

தான்பிறந்த தாய்நாடாம் நயினைத் தீவில்
சனசமுக நிலையமதைத் தாபித் தன்று
மீன்பிறங்கு கடல் மோட்டார்ப் படகுச் சேவை
வேளைதொறும் தவறாது நடத்தி யம்பாள்
வான்சிறந்த விழாநாளில் அன்ன மீந்து
வளரமுத சுரபிவழி நடத்தித் தொண்டு
தான் புரிந்து சமூகத்திற் தலைமை தாங்கித்
தழைத்தவொரு பெருமகனைத் தணந்தோ மின்றே.

அன்ன சத்திர மாயிரம் வைத்தலின்
அறிவுத் தாகத்திற் கானநூற் சாலைகள்
தன்னலங் கருதா தீண்டு தந்துபின்
தாயள் நாக பூஷணி சந்நிதி

---

"ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம் தேவி இங்குனதே" — பாரதி

முன்னர் தாக சாந்தி முறைவைத்து
மோட்ச வீடதை முன்னதாய்த் தேடிய
நன்னியன் பூபால் சிங்க நாமனை
நாடுதான் மறவா தேறு மேட்டிலே.

## தோழர் பிரலாபம்

மல்லாடுந் தோழரெலா முனது பேச்சில்
மயக்கிடுவார் மகுடிமுனர்ப் பாம்பு போல
சொல்லாட இனியவெங்கள் தோழா! வுன்றன்
சுவைகொண்ட நாவெங்கே தூய்மை யெங்கே
வில்லாடு வதனமொடு வீரஞ் சொட்ட
விரித்துரைக்கும் பொதுவுடமை விளக்க மெங்கே
அல்லாடும் பெருமான்று னழைத்து உன்னை
அருகிருத்திச் சமதர்ம மறிகின் றூனோ?

## மனைவி மக்கள் பிரலாபம்

வெண்டுகிலோ டுத்தரியம் விளங்கு மார்பு
விரிந்தமுக மலரிடத்து மேவும் ஆடி
தண்டரள முறுவல் தலை வகிர்ந்த கோலம்
தாங்கண்டு நாம்பெருமை கொண்டோ மையா!
மண்டுபெருந் துயர்க் கடலில் வீழ்த்தி இன்று
மறைந்தாலே யெமைமறந்து மன்னு! அன்பு
கொண்டுனது வடிவமனத் திரையின் மீது
குறித்திட்டோம் மறவோ மூன் குறிக்கோளையா

## மைத்துன மைத்துனியர் சோதர சோதரியர் மருகர் முதலியோர் பிரலாபம்

மச்சான்மச் சாளென்றுல் மதுரஞ் சொட்டும்
மற்றுமுறைப் பெயர்சொல்லுங்கால் மனதைக் கிள்ளும்
இச்சாவேன் வந்ததுனக் கந்தோ வெங்கள்
இன்னுயிரே! சோதரனே! இடையிற் போனுய்
கச்சானில் முறிந்தமரக் கொம்பர் போலக்
கதியிழந்து வாடுகிறோம் கருணை மாமா!
பிச்சான இறைவனவன் செய்கை எம்மைப்
பிரித்துவிட்ட தெப்பிறப்பில் பெயர்த்துங் காண்போம்.

---

''செந்தமிழ் நாடென்னும் போதினிலே — ஒரு
தேன்வந்து பாயுது காதினிலே''
— பாரதி

## தேற்றம்

எத்தனைதான் செய்தாலும் இந்தவுடல் நில்லாது
உத்தமர்பல் பேரிங் குயிர் துறந்தார் — வித்தகஞ்சேர்
பேரறிஞன் பூபால சிங்கம் பிரிவியற்கை
நீரறிவீ ரித்துயர்வீ ணென்று.

## சாந்தி

அறுபதிலே ஒன்றுகுறை ஆண்டுபுவி வாழ்ந்து
மறுவுலகுக் காளாய் மறைந்தான் — உறுதவத்து
ஏந்தல்பூ பாலசிங்கம் இன்னுயிர்பூஞ் சேவடிக்கீழ்ச்
சாந்திபெற நாம்வணங்கு வோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

க. காமாட்சிசுந்தரம்
நயினாதீவு.

---

''சென்றுடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!'' — பாரதி



# நன்றியும்

# வணக்கமும்

பிறந்தவர் எல்லாம் இறப்பவர் எனினும்
சிறந்துயர் வுற்றோர் சிந்தையில் இருப்பர்
மறைந்தும் மறையா மகிமையில் அன்னார்
நிறைந்து நிற்பர் நிலவளக் கிதுவாம்
எங்கள் தந்தையும் எம்முயர் தலைவனும்
இங்கிதற் காளாய் இன்னுயிர் நீத்தார்.
அன்னார் ஆத்மா சாந்தி அடைய
இன்னார் இனியார் என்பது இன்றி
அஞ்சலி செலுத்தி, ஆற்றிய உரைகளும்
செஞ்சொற் கவிகளும் சிந்தையாற் சொல்லி
நெஞ்சம் நிறைத்து நிம்மதி தந்தீர்,
உந்திய உணர்வில் உதிர்த்தவை இம்மலர்
தந்து கமழ்ந்து தமிழ்மணம் பரப்பும்,
வெந்த உள்ள வேதனை தணிய
சிந்தைக் காறுதல் செப்பிய பெரியீர்!
எந்தை இறைவி நயினை அன்னையின்
மந்தகாச மதிமுக ங்கருணை யில்
பந்த பாசப் பற்றினை நீக்கி
வந்தனை கூறி வணக்கமும் தந்து
சிந்தனை அவள் பால் செலுத்துகின்றோமே.

பூபாலசிங்கம் குடும்பத்தினர்

# நற்சிந்தனை

அண்ணல் மகாத்மாகாந்தி அவர்கள் 1922-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி சட்டமறுப்புச் செய்யப்போவதாக முன்னறிவிப்புக் கொடுத்தார். அதன்படி சட்டமறுப்பைத் தொடங்கினர். 'சௌரி சௌரா' என்ற நகரத்தில் ஓர் ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது கூட்டத்தைக் கலைக்கப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சிறிது நேரத்தில் பொலிசாரிடமிருந்த குண்டுகள் யாவும் முடிந்துவிட்டன. செய்வது அறியாத பொலிசார் தாணவுக்குள் சென்று பதுங்கினர்கள். சீற்றமடைந்த மக்கள் தாணவுக்கே தீ மூட்டினர்கள். தீ, பற்றி எரிந்தது. உயிரைக் காப்பாற்றவேண்டி வெளியே ஓடிவந்த பொலிசார் மக்கள் கூட்டத்தினரால் கொல்லப்பட்டனர். மகாத்மா இதனை அறிந்து சட்டமறுப்பு இயக்கத்தையே உடனடியாக நிறுத்தினர். எல்லோரும் 'எதற்காக' என்று காரணம் கேட்டனர். அவர் சொன்னவிடை இதுதான்! ''தீயவழியிலே சென்று பெறுவது பெரிய பயன்தரக் கூடியதாக இருக்கலாம. ஆனல் அது விரும்பத்தகாதது.

''வெடிகுண்டு, படுகொலை, தடியடி, துப்பாக்கி, தூக்குமேடை, அந்தமான்தீவு என்ற இன்னோரன்ன எத்தனையோ ஆபத்துக்கள் உரிமைப்போரிலே அடுத்தடுத்துவரும். இவ்வளவையும் நான் பொருட்படுத்தப் போவதில்லை. மரணபயமின்றி இக்காரியத்திலே ஈடுபடத் தீர்மானித்துவிட்டேன். ஆயுத பலத்தை நம்பி அல்ல, மன உறுதியை நம்பி.''

''பழி மலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழி நல் குரவே தலை — குறள்

''ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.'' — குறள்

''பழிஎனின் உலகுடன் பெறினும் கொள்ளவர்'' — புறநானூறு



அபிராமி அச்சகம், 17, ஜும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம்.